www.tamilarangam.net

# சமபந்தி அரசியல்

ஆ. சிவசுப்பிரமணியன்



இளைஞர் வெளியீடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

NORWAY SIGNATURE

# சமபந்தி - ஓர் எதிர்ப்பண்பாடு

ஆ. சிவசுப்பிரமணியன்

'பந்தி' என்ற சொல் பொதுவாக, வரிசை என்ற பொருளையும் விருந்தில் ஒரே வரிசையில் அமர்ந்து உண்ணுவதையும் குறிக்கும். 'பந்தி' என்ற சொல்லுக்கு 'உண்டற்கு அமர்ந்தவர் வரிசை' என்று தமிழ் தமிழ் அகர முதலி விளக்கம் தரும். இதனையொட்டியே 'பந்திப் பாய்', 'பந்தி விசாரணை', 'பந்திக்கு முந்து' என்ற சொற்கள் உருவாகியுள்ளன. ஒரே வரிசையில் அமர்ந்து உண்ணுபவர்கள் ஒரே சாதியினராக இருக்கவேண்டுமென்ற மரபு இந்தியச் சமூகத்தில் நிலைபெற்றிருந்தது—நிலைபெற்றுள்ளது. இம்மரபுக்கு மாறாகப் பல்வேறு சாதியினரும் மதத்தினரும் தரத்தினரும் ஒரே வரிசையில் சமமாக அமர்ந்து உண்பதையே 'சமபந்தி' என்ற சொல் குறிக்கின்றது. வேறுபாடின்றி அமர்ந்து உணவருந்துவது சிறப்பான ஒன்றாகக் கருதப்பட்டது. பஞ்ச பாண்டவருடன் வந்து சேரும்படி வேண்டிய குந்தியிடம், துரியோதனன் தனக்குச் செய்த சிறப்பாக 'ஆருயிர்த் துணையெனக் கருதி கொற்றமா மகுடம் புனைந்து அரசளித்துக் கூட உண்டு' என்று கர்ணன் குறிப்பிடுகின்றான். போருக்குச் செல்லுமுன் வீரர்களனைவரும் கலந்துண்ணும் செயலைப் 'பெருஞ்சோற்று நிலை' என்று தொல்காப்பியர் குறிப்பிடுவார். சங்க இலக்கியங்களில் இடம் பெறும் 'பாதீடு', 'கூட்டுணா' என்ற சொற்கள் இனக்குழு வாழ்வில் வேட்டையில் கிடைத்த பொருளை அனைவரும் பகுத்துண்டதைக் குறிக்கின்றன. பொருளியல் வேறுபாடுகளும் சாதிய மேலாண்மையும் உருவான பின்னர் உணவுண்ணும் போது உடன் அமரவேண்டியவர்கள் குறித்த வரையறைகள் உருவாக்கப்பட்டன.

### இந்து மதமும் சமபந்தியும்

வர்ணாசிரமத்தை அடிப்படையாகக்கொண்ட வேத சமயமென்ற பிராமணியச் சமயம் உணவு சமைப்பது, பரிமாறுவது, உண்பது தொடர்பாக, இறுக்கமான கட்டுப்பாடுகளை வகுத்துள்ளது. 'ஸ்மிருதிகள்' எனப்படும் வடமொழி நீதி நூல்களில் இவை இடம்பெற்றுள்ளன.

www.tamilarangam.net



கைவினைஞர்கள், மருத்துவர், வட்டித் தொழில் புரிபவர், வண்ணார், பஞ்சமர், மது வியாபாரி, உளவாளி, வேடுவர், செருப்புத் தைப்பவர் ஆகியோரிடமிருந்து பிராமணர்கள் உணவு பெற்றுக்கொள்ளக்கூடாதென்று வசிட்டர் கூறுகின்றார். நாய், பதிதன், சண்டாளன் பார்வையில் பட்ட உணவை உண்ணக்கூடாதென்று ஆபஸ்தம்ப சூத்திரம் கூறுகிறது. சூத்திரன் வழங்கிய உணவு வயிற்றிலிருக்கும் நிலையில் இறந்து போனவன் மறுபிறப்பில் பன்றியாகப் பிறப்பான் அல்லது சூத்திரன் குடும்பத்தில் பிறப்பான் என்று வசிட்டர் குறிப்பிட்டுள்ளார். அங்கிராஸ் என்ற முனிவரின் கருத்துப்படி சண்டாளனிடமிருந்து தண்ணீர் வாங்கிக் குடித்த பிராமணன் அதற்குப் பரிகாரமாகப் பல நாள்கள் பசுமாட்டின் சிறுநீரைப் பருகவேண்டும். சண்டாளன் நீரெடுக்கும் கிணற்றிலிருந்து நீர் பருகிய பிராமணனுக்கும் இதே தண்டனையை வசிட்டர் விதித்துள்ளார் (அனுமந்தன் 1979 : 40).

பந்தியில் உடன் உண்ணுபவர்கள் குறித்து 'மனுதர்ம சாஸ்திரம்' சில வரையறைகளைச் செய்துள்ளது. பந்தியில் விலக்கப்படவேண்டியவர்கள் என்ற தலைப்பில் இந்நூலில் இடம்பெற்றுள்ள செய்திகள் வருமாறு:

திருடன், ஐம்பெருங் குற்றங்களியற்றியவன், பேடி, நாத்திகன் (3 : 150)

சாதி விட்டுத் தாழ்ந்த குலத்தில் பெண் எடுத்தவன், விதவையை மணந்து பிறந்த பிள்ளை (3 : 155)

தாழ்ந்த குலத்தானிடம் கலைகள் பயின்றோர், கீழ்ச் சாதியினருக்குப் பயிற்றுவித்தோன் (3:156)

யானை, காளை, குதிரை, ஒட்டகம் இவற்றைப் பழக்குவோன், சோதிடம் கூறிப் பிழைப்பவன், பறவை பிடித்து வளர்ப்பவன், படைக்கலப் பயிற்சி அளிப்பவன் (3 : 162)

எருமை, ஆடு இவற்றை வியாபாரம் செய்து பிழைப்போன், அறுதலியை மணப்பவன், கூலிக்குப் பிணம் தூக்கி (3 : 166)

இவ்வாறு பந்தியில் இடம் பெறத் தகாதவர்களைப் பட்டியலிடும் மனுதர்ம சாஸ்திரம், இதை மீறினால் ஏற்படும் விளைவுகளையும் குறிப்பிடுகிறது.

பந்தியில் அமரத் தகாதவன், அந்தணாளர் புசிப்பதைப் பார்த்தால் அன்னமிட்டவனுக்குப் பலன் வீணாகிவிடுமாகையால் அப்படி அவன் பார்க்காமல் செய்யவேண்டும் (3 : 176).

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புசித்துக் கொண்டிருக்கும் அந்தணாளரைத் தாழ்ந்த குலத்தாருக்கு வேள்வி புரிந்தோன் தொடுவானாயின் அவ் வளவு பேருக்கும் அன்னமிட்ட பலன் வீண் (3 : 178).

ஆட்டாங்குடி விற்போனுக்கு சிரார்த்த போஜனம் கொடுத்தவன் மறுபிறப்பிற் பன்றியாய்ப் பிறந்து மலம் உண்பான். மருத்துவனுக்கு அளித்தவன் சீழ், உதிரம் இவற்றை உண்ணும் பிறவி எடுப்பான் (3 : 180).

அடுத்து 'பந்தியில் விலக்கப்பட்டவர்கள், மாசுபடுத்திய பந்தியைத் தூய்மை செய்பவர்களான அந்தணர்களைப் பற்றிக் கூறுகிறேன். கேளுங்கள்' (3 : 183) என்று பந்தியில் வரவேற்கத் தக்கவர்களைக் குறித்துப் பின்வருமாறு பட்டியலிடுகிறார்:

நான் மறையும் ஆறங்கமும் முறையாய் ஓதியோரும் அவர் தம் வழித்தோன்றல்களும் (3 : 184)

யஜுர் வேதத்தில் பிரதான பகுதியை நன்கு ஓதியவர், அணையாமல் ஐம்பெரும் தீ வளர்ப்போர், ருக்வேதத்தின் முக்கியப் பகுதியைப் பிழையறக் கற்றோர் (3 : 185)

குருமுகமாய்க் கற்ற மறையின் பொருள் உணர்ந்த மேலோன், வேதப் பொருளுணர்த்திய குருவுக்கு ஆயிரம் பசுக்களைக் காணிக்கையாகத் தந்தவன், நூறாண்டு வாழ்ந்த அந்தணன் (3 : 186)

இவர்களனைவரும் 'பந்தியைப் புனிதமாக்க வல்லவர்கள்' என்று மனு குறிப்பிடுகிறார். மனுதர்மம் கூறும் இச்செய்தி களை உற்றுநோக்கினால் பெரும்பாலும் உடல் உழைப்பாளி கள், பந்தியில் அமரத்தகாதவர்களாகவும், பந்தியைப் பார்க்கக் கூடாதவர்களாகவும் ஒதுக்கப்பட்டுள்ளதை உணரலாம்.

மனுவின் இவ்விதிகளை மீறுவது கடுமையான குற்றமாகக் கருதப்பட்டது. மராட்டிய மோடி ஆவணம் ஒன்றில், 'ஒருவன் கீழ்ப்பால் ஒருத்தியின் கைச்சோறு உண்டனன். அவன் பிராமணன்; ஆகையால் மீண்டும் உபநயனச் சடங்கு முந்நூல் அணியும் சடங்குக்கு உட்படுத்தப்பட்டான். பிராயச்சித்தம் செய்துகொண்டான். அரச தண்டனையும் அளிக்கப் பெற்றது" (வேங்கடராமையா 1984 : 184) என்ற செய்தி இடம் பெற்றுள் ளது. பிராமணர்களுக்கு இலவசமாக உணவு வழங்குவதற் காகத் திருவிதாங்கூர் மன்னர்கள், 'ஊட்டுப்புரை' என்ற பெயரில் உணவுச் சாலையை அமைத்திருந்தனர். திருவனந்த புரம் ஊட்டுப்புரையில் பிராமணர்களுக்கு உணவு பரிமாறப் பட்டிருந்த நிலையில், திருவாங்கூர் மன்னரான மூலம் திருநாள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறுவயதில் அதை எட்டிப் பார்த்துவிட்டார். அவர் பார்வையால் உணவு தீட்டுப்பட்டதாகக் கூறி, பிராமணர்கள் அவ்வுணவை உண்ண மறுத்துவிட்டார்கள். பின்னர் பரிமாறப்பட்ட உணவு வகைகளை அப்புறப்படுத்தி, சடங்கு ஒன்றின் மூலம் அவ்விடத்தைத் தூய்மைப்படுத்தி, புதிதாகச் சமைத்த உணவை உண்டனர் (தகவல்: அ. கா. பெருமாள்). உணவு வழங்குவது மன்னராக இருந்தாலும்கூட அவரது மகன் அவ்வுணவைப் பார்த்தது தீட்டாகக் கருதப்பட்டது.

சமபந்திக்கு எதிராக மனுதர்ம சாஸ்திரத்தில் இடம்பெற்றுள்ள கருத்துக்கள் இன்றும் ஆதிக்கம் செலுத்துகின்றன. சான்றாக, ஜெயேந்திர சந்திரசேகர சுவாமிகள் கூறியுள்ள பின்வரும் கருத்துக்களைக் குறிப்பிடலாம்:

> போஜனம் பண்ணும்போது நம்மோடு சாப்பிடுகிறவர்களின் குணதோஷங்களால் பரமாணுக்களும் நாம் சாப்பிடும் அன்னத்தில் ஓரளவு சேர்கிறது. பரம சுத்தமாக இருக்கப்பட்டவர்களை 'பங்த்தி பாபனர்'கள் என்று சொல்லியிருக்கிறது. அதாவது அவர்கள் உட்கார்ந்திருப்பதாலேயே அந்தப் பந்தி (பங்க்தி)யைச் சுத்தப்படுத்தி விடுகிறார்களாம். அவர்களோடு நாம் போஜனம் பண்ணினால் அந்த ஆஹாரம் உள்ளே போய் நம் மனசைத் தூயதாக்கும். இதே மாதிரி 'பங்க்தி தூஷக'ர்களைப் பற்றியும் சொல்லியிருக்கிறது. ரொம்பவும் தோஷமுள்ள இவர்கள் உட்கார்ந்திருப்பதாலேயே அவர்களுடைய பந்தி முழுவதும் அசுத்தியாகிவிடுகிறது.
>
> இது மட்டுமில்லை. வருணாச்சிரம விவகாரத்தையும் கவனிக்கவேண்டியிருக்கிறது. சைவ போஜனமே பண்ண வேண்டிய சாதிக்காரர் அசைவ போஜனம் அனுமதிக்கப்பட்ட சாதியாருடன் சேர்ந்து சாப்பிட்டால் என்னவாகும்? (கணபதி 1986 : 625)

மேல்சாதி—கீழ்சாதி என்ற கருத்துநிலையினை வெளிப்படையாகச் சொல்லத் துணியாமல் சைவ உணவு உண்போர், அசைவ உணவு உண்போர் என்ற சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். எல்லாவற்றிற்கும் மேலாக 'சாசுவத ஒற்றுமைக்கு வழி, சேர்ந்து உண்டு காட்டுவதல்ல, சேர்ந்து தொண்டு காட்டுவதேயாகும்' என்று கூறிவிட்டு ஒவ்வொருவரும் தானே சமையல் செய்வது (ஸ்வயம்பாகம்) பிரச்சனைகளுக்குத் தீர்வு தருமென்று கெட்டிக்காரத்தனமாக வழிகாட்டுகிறார். இது தொடர்பாக அவர் கூறும் கருத்து வருமாறு:

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


> ஸ்வயம்பாக நியமமானது சாதிச் சண்டை சாப்பாட்டிலே வராமலும் பெரிய உபகாரம் பண்ணிவிடும். மேல் சாதி கீழ்சாதி, என்ன சாதியார், யார் சமைத்ததைச் சாப்பிடலாம், சாப்பிடக் கூடாது என்கிற பேச்சிற்கே இடமில்லாமல் ஆகிவிடுகிறது. (மேலது: 624)

'ஸ்வயம்பாகம்' தொடர்பாகக் காஞ்சி ஆச்சாரியார் கூறும் இக்கருத்து ஒன்றும் புதியதல்ல. சோழர்கள், தஞ்சை மராத்திய மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் அன்ன சத்திரங்களில் பொது மக்களுக்கு அன்னம் வழங்கப்பட்டது. இத்தர்மத்தைக் குறிக்கும் கல்வெட்டுக்களில், 'உலுப்பை' என்ற சொல் இடம் பெற்றுள்ளது. இச்சொல் குறித்து வேங்கடராமையா (1989 : 115)

> சத்திரத்துக்கு வரவியலாதவர்கட்கும் பெரிய அதிகாரிகட்கும் வந்து உண்பதற்கு விரும்பாதவர்கட்கும், அரிசியும் அதற்குரிய உப்பு; புளி முதலிய பொருள்களும் அளிப்பது வழக்கம். இது உலுப்பை எனப்படும். இங்ஙனம் உலுப்பைகள் அந்தணர்கட்கும் பைராகிகட்கும் வெள்ளையர்களாகிய பெரிய அலுவலர்கட்கும் அளிக்கப்பெற்றன

என்று விளக்கமளிக்கிறார். 'உலுப்பை' என்ற பெயரால் சமைக்காத உணவுப் பொருள்களைப் பெற்றுத் தங்கள் ஆசாரத்தையும் சமூக உயர்நிலையையும் பாதுகாத்துள்ளனர். இன்றும்கூட பிராமணர் அல்லாதாரின் மங்கல, அமங்கல நிகழ்ச்சிகளை நடத்த வரும் பிராமணப் புரோகிதர்கள் உணவு விருந்தில் கலந்துகொள்வது இல்லை. அதே நேரத்தில் அரிசி, காய்கறி, வாழையிலை ஆகியவற்றை, தட்சணையுடன் தானமாக எடுத்துச்செல்கின்றனர். சமபந்தியைத் தவிர்க்கும் வழிமுறையாகவே இது நடைபெறுகிறது என்பதைத் தானம் வழங்கும் சூத்திரர்களும் சற்சூத்திரர்களும் உணர்வதில்லை.

நெல்லை, தூத்துக்குடி, குமரி மாவட்டங்களின் கிராமப் புறங்களில் பிற்படுத்தப்பட்ட சாதியினர் வீடுகளில் நிகழும் திருமணங்களில் வேளாளர் மற்றும் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்கள் தாம்பூலம் மட்டும் பெற்று வீடு திரும்புகின்றனர். திருமண விருந்தை அவர்களில் பலர் உண்ணுவதில்லை. ஆனால் அவர்கள் வீடுகளுக்கு அரிசி, காய்கறி போன்ற பொருள்களைத் திருமண வீட்டார் வழங்குகின்றனர். சிலர் பாயாசம் வைக்க வெல்லம், முந்திரிப்பருப்பு போன்ற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பொருள்களையும் வழங்குவதுண்டு. இதுபோன்றே தலித்துகள் வீட்டில் திருமணம் நிகழ்ந்தால் பிற்படுத்தப்பட்ட சாதியினருக்கு அரிசி, காய்கறி கொடுக்கும் வழக்கம் உண்டு. சில கிராமங்களில் முழு ஆட்டுக்கிடா ஒன்றைப் பிற்படுத்தப்பட்ட சாதிக்காரர்கள் அனைவருக்கும் பொதுவாகக் கொடுக்கும் பழக்கமுண்டு.

'இரட்சணிய யாத்திரீகம்' என்ற நூலின் ஆசிரியரான எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை, சாயர்புரத்தில் ஆசிரியராகப் பணியாற்றிவரும்பொழுது வேளாளர் சமூகத்தைச் சார்ந்த இளைஞன் ஒருவன், அவரிடம் கல்வி பயில உதவி கேட்டு வந்தான். கிருஷ்ணபிள்ளை வேளாளர் வகுப்பைச் சார்ந்தவர் என்றாலும் கிறித்தவரானதால், அவர் வீட்டில் அவன் உணவருந்த முடியாது. உணவு விடுதி எதுவும் இல்லாத நிலையில் அவ்விளைஞனின் பசியைப் போக்க கிருஷ்ணபிள்ளை மேற்கொண்ட வழிமுறை குறித்து அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதிய தங்கராசனார் (1958 : 106) இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்:

> முழியண்ணன் கிணறு என்ற குடிநீர்க்கிணறு ஒன்று இருந்தது. அரிசி, பருப்பு, விறகு, காய்கறி முதலியவற்றை எடுத்துக்கொண்டு அவ்வாலிபனுடன் அக்கிணற்றுக்குப் புறப்பட்டார் புலவர்! கிணற்றண்டை அமர்ந்து அடுப்புக் கூட்டி உணவு சமைக்கும் முறையினைச் சொல்லிக் கொடுக்க அவ்வாலிபன் சமையல் செய்தான். உணவு சமைத்து அவன் உண்ணும்வரை அவனருகிலேயே இருந்தார். இல்லாத பொருள்களை இடைக்கிடையே இல்லத்திற்குச் சென்று எடுத்துக்கொண்டுவந்து கொடுத்தார்.

இவ்வாறு சுயமாகச் சமைத்து உண்ட இவ்வாலிபர் கிருஷ்ணபிள்ளையின் உதவியால் கல்வி கற்று, பின்னர் வழக்கறிஞராகி திவான் பகதூர் அப்பாசாமிபிள்ளை என்று புகழ் பெற்றார்.

ஆதிக்கப் பண்பாடான இந்துப் பண்பாட்டில் தீட்டு × தூய்மை என்ற இரு கருத்துநிலைகள் ஆழமாக வேர்பிடித்துள்ளன. இவற்றுள் தீட்டு என்பது நிரந்தரத் தீட்டு, தற்காலிகத் தீட்டு என இருவகைப்படும். நிரந்தரத்தீட்டு சாதியால் வருவது. எனவே, இதிலிருந்து ஒருவன் தன்னை விடுவித்துக் கொள்ளமுடியாது. ஆனால், தற்காலிகத் தீட்டிலிருந்து விடுபடமுடியும். அவ்வாறு விடுபட்ட பின்னர்தான் ஒருவன் தூய்மை அடையமுடியும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


தூய்மை அடைந்த நிலையில்தான் ஒருவன் கடவுளை வழிபட முடியும். இறந்த முன்னோர்களுக்கான 'சிரார்த்தம்' என்ற இழவுச் சடங்கை நடத்தமுடியும். இதனடிப்படையில் தான் நீராடுதல், புத்தாடை அணிதல் ஆகியன வழிபாட்டுச் சடங்குகளுடன் இணைந்துள்ளன. தூய்மைக்கெதிரான தீட்டுத் தன்மை, தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவரைத் தொடுவதால் ஏற்படுகிறது. அத்துடன் இறப்பு-பிறப்பு, மாதவிலக்கு, உடல் உறவு, மலசலம் கழித்தல், உடம்பிலிருந்து வெளியேறும் வியர்வை, எச்சில் உணவு உண்டல் ஆகியனவும் தீட்டை ஏற்படுத்தும் தன்மை உடையன (Paulin 1995 : 79).

தீட்டை ஏற்படுத்தும் தன்மையுடையதாகக் கூறப்படும் உணவு என்பது சமைத்த உணவேயாகும். எனவே, வேத சமயமாக உருவாகி இந்து சமயமாக வளர்ச்சி பெற்ற பிராமணியச் சமயம், சமைத்த உணவு தொடர்பாகச் சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இச்சமயத்தின் வழிபாட்டுத் தலங்களில் இன்று வரை மிகுந்த எச்சரிக்கை உணர்வுடன் இக்கட்டுப்பாடுகளைப் பாதுகாத்து வருகிறார்கள்.

இந்து சமயத்தால் செரிக்கப்பட்ட சைவ, வைணவ சமயக் கோவில்களை வழிபடச் செல்வோர் வாழைப்பழம், தேங்காய், பால், நெய், கற்கண்டு ஆகிய சமைக்காத உணவுப் பொருள்களைத்தான், பூசகர் வழியாகக் கருவறையில் உள்ள தெய்வத்தின் முன் படைக்கிறார்கள். சமைத்த உணவுப் பொருளைப் படையலாக வழங்கக்கூடாது; வழங்கவும் முடியாது. ஏனெனில் சமைத்த காரணத்தினால் அது தீட்டுக்குரிய பொருளாகிறது.

அதே நேரத்தில் 'திருமடைப்பள்ளி' என்றழைக்கப்படும் கோவில் சமையலறையில் சமைக்கப்பட்ட பொங்கல், பாயாசம், புளியோதரை, தயிர்ச்சோறு போன்ற உணவுப் பொருள்கள் 'நைவேத்தியம்' என்ற பெயரில் கருவறையில் படைக்கப்படுகின்றன.

இவ்வுணவைக் கருவறைக்குள் கொண்டுவரும்பொழுது துணியால் மூடியே கொண்டுவருவர். கருவறையைத் திரை போட்டு மறைத்த பின்னரே உணவை மூடியுள்ள துணியை விலக்குவர். கருவறையில் போடப்படும் திரையும் நைவேத்தியத்தை மூடியுள்ள துணியும் பிறர் பார்வை பட்டு நைவேத்ய உணவு தீட்டாகாமல் தடுக்கப் பயன்படுகின்றன.[1] வளம் படைத்த கோவில்களின் மடைப்பள்ளியிலிருந்து வரும் உணவு பெரும்பாலும் பட்டுத் துணியால் மூடப்பட்டிருக்கும், ஏனெனில், 'பட்டுக்குத் தீட்டில்லை' என்பது பழமொழி. இதனால்தான் இன்றும்கூட, புராணப்பிரசங்கிகளும் கதாகாலட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


சேபம் செய்பவர்களும் நிகழ்ச்சியினிடையே பாலைப் பருகும் பொழுது பட்டுத் துணியால் மறைத்துக்கொண்டு பருகுகின் றனர்.

கருவறையில் திரையை விலக்கிய பின்னரே நைவேத்ய உணவானது 'பிரசாதம்' என்ற பெயரில் பக்தர்களுக்கு விநி யோகிக்கப்படும். வழிபடுபவர்கள், குறிப்பிட்ட உணவுப் பொருள்களை நைவேத்யமாகப் படைத்து வழிபட விரும்பி னால் கோவில் மடைப்பள்ளியில்தான் சமைக்கவேண்டும். எனவே, குறிப்பிட்ட உணவைச் சமைப்பதற்குரிய பொருள் களை வாங்கிக்கொடுத்துவிடவேண்டும் அல்லது அவற்றுக் காகும் செலவைப் பணமாகக் கொடுத்துவிடவேண்டும். இந்த இடத்தில் ஓர் உண்மையை நினைவுபடுத்திக்கொள்வதவசியம். நிறுவனச் சமயங்களான சைவ, வைணவக் கோவில்களின் திருமடைப்பள்ளிகளில் பிராமணர்கள் மட்டுமே சமையல் தொழிலை மேற்கொள்ளவேண்டும். தலித்துகளும் சூத்திரர் களும் சற்சூத்திரர்களும் திருமடைப்பள்ளியில் நுழையமுடி யாது.[2] அங்கு சமைக்கப்பட்ட உணவைப் 'பிரசாதம்' என்ற பெயரில் பெற்றுக்கொள்வதுடன் நிறைவடையவேண்டும். சைவ, வைணவ சமயக் கடவுளர்களும் பிராமணர்கள் மட் டுமே சமைத்த உணவைத் திரை மறைவில் உண்டு தீட்டுக்கு ஆளாகாது தங்களைப் பாதுகாத்துக்கொள்கின்றனர்! சமைத்த உணவுப் பொருள்களை யாரிடமிருந்தெல்லாம் பிராமணர்கள் தானமாகப் பெறக்கூடாதென்று மனு (4 : 205-217) பட்டியலிட் டுள்ளார். அதை மீறி, பிறர் சமைத்த உணவை உண்பதால் ஏற்படும் விளைவுகளையும் அவ்வாறு உண்டவர்கள் செய்ய வேண்டிய பரிகாரங்களையும் அவர் கூறியுள்ளார்:

> வேத கோஷங்களில்லாத வேள்வியிலும் பெண்களோ, பேடிகளோ இயற்றும் ஒன்றிலும், அந்தணன் புசித்தல் தகாது.
>
> இவர்கள் இயற்றும் வேள்வித் தீயில் சொரியும் நெய் நல்லோர்க்குத் துன்பமும் தேவர்க்கு வெறுப்பும் உண் டாக்குவதால், இவற்றை மறுத்துவிடவேண்டும்.
>
> பித்தன், கோபி, பிணியாளன் இவர்களின் விருந்து, ரோமம், புழு கலந்த உணவு, காலால் துவைத்த அன்னம்.
>
> கொலை பாதகர் கண்ணெச்சிற்பட்டது, வீட்டு விலக் கானவள் உண்டு மிகுந்தது, காகம், நாய் இவை தீண்டியது.
>
> பசு மோந்தது, தர்ம சத்திரத்தில் போட்டது, பிச்சைக் காரர்களைக் கூட்டி வழங்குவது, வேசையின் தானம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கள்வன், தெருப்பாடகன், வட்டி வாங்குவோன், வேள்விக்காப்பிலிருந்து அப்போதே வந்தவன், உலோபி, விலங்கிடப்பட்டவன், சிறையிருந்தவன் இவர்கள் தரும் அன்னம்.

ஐம்பெரும் பாவிகள், பேடி, குடிகேடி, இடம்பக்காரன் இவர்கள் போடும் அன்னம்; திரிந்துபோன பால், தயிர், பழவமுது, தாழ்ந்தவனுக்கிட்டு மிகுந்தது.

மருத்துவன், வேடன், கொடியவன், எச்சிற் பொறுக்கி, கலப்புச் சாதியான், அரசன் இவர்களால் இடப்படும் சோறு; பிள்ளைப் பேற்றினளுக்கு ஆக்கியது, உடனுண்போன் எழுந்துவிட்ட பின் பரிமாறப்படுவது, தீட்டுக்காரனுடையது.

உபசரித்து உண்பிக்காதது, இறைவனுக்குப் படைக்காதது, வேள்விக்காகவன்றி வெறுமே சமைத்த புலால், கணவனோ மகவோ இல்லாத பெண் தயாரித்தது, பகைவன் இடும் சோறு, பாவியின் படையல், தும்மல் துகள் தெறித்தது.

கோள் கூறுவோன், பொய்ச்சான்று பகர்வோன், வேள்வியின் நற்பலனை விலை கூறுவோன், நட்டுவன், தோணிக்காரன், நன்றி கொன்றவன் இவர்கள் தரும் உணவு.

கருமான், வலைஞன், கூத்தாடி, பொற்கொல்லன், பிரம்பு வேலை செய்பவன், படைக்கலம் விற்போன் ஆகியோரின் விருந்துணவு.

வேட்டை நாய் வளர்ப்போன், கள் விற்போன், சாயக்காரன், காதகன், நடத்தை கெட்டவளின் கணவன் இவர்களது அன்னம்.

மனைவியுடன் கூடாவொழுக்கமுடையவனை அறிந்து தன்னுடன் வைத்திருப்பவன், பெண்ணுக்கடங்கியவன், சாவுத் தீட்டுடையவன் இவர்கள் கையால் வழங்கப்பெறும் உணவு; மனதுக்குப் பிடிக்காத அன்னம்.

இவையனைத்தும் உண்ணத் தகாதவையாகும்.

எனவே அறியாமல் உண்டபோதும், மூன்று நாள் உண்ணாநோன்பு இருக்கவும். தெரிந்து உண்டால் மலஜல, வீர்யங்களைச் சுவைத்தது போலாகுமாதலால், மிகவும் கடுமையாக உண்ணாநோன்பிருக்கவும்.

அதே நேரத்தில், சமைத்த உணவைத் தம் சமயத்தைச் சேர்ந்த துறவிகள் ஏற்பது குறித்துச் சமணமும் புத்தமும் தடை எதுவும் செய்யவில்லை (ரொமிலா தாப்பர் 1978 : 117).

www.tamilarangam.net


இது வேத சமய நெறிக்கு எதிரான மரபாகும். ஏனெனில் நெருக்கடியான நிலையில்கூட உணவைப் பெறாது தானியத்தைப் பெறும்படி மனு அறிவுரை கூறியுள்ளார்.[8]

### நாட்டார் சமயத்தில் சமைத்த உணவு

அதே நேரத்தில் இதற்கு நேர்மாறாக நாட்டார் தெய்வக் கோவில்களில் 'பொங்கலிடுதல்' என்ற சடங்கு, குறிப்பிட்ட தெய்வங்களின் முன்னர் நடைபெறுகிறது. இதன் இறுதி நிகழ்ச்சியாகப் பானையிலுள்ள பொங்கல் சோறு அல்லது பாயாசத்தைத் தெய்வத்தின் முன் படைத்து வழிபடுகின்றனர். தென் மாவட்டங்களில் 'கொடை' எனப்படும் நாட்டார் தெய்வக்கோவில் திருவிழாக்களின்போது தெய்வ உருவத்தின் முன் ஓலைப்பாய் அல்லது துணியை விரித்துச் சோற்றைக் குவித்து வைப்பர். இதை, 'படப்பு (படைப்பு) போடுதல்' என்று குறிப்பிடுவர். அவித்த முட்டை, இறைச்சி ஆகியனவற்றையும் படைப்புச் சோற்றில் கலக்கும் வழக்கம் சில கோவில்களில் உண்டு. சைவ வைணவக் கோவில்களைப் போன்று உணவைத் திரையிட்டு மறைப்பதில்லை.

சமைத்த உணவைப் படைத்து வழிபடுவது விலக்கப்பட்ட ஒன்றாக இந்து சமயத்தில் விளங்க, நாட்டார் சமயத்தில் அது முக்கியக் காணிக்கைப் பொருளாக விளங்குகிறது.

தாம் சமைத்த உணவை நேரடியாகப் படைக்கும் உரிமையை வழங்கும் 'பொங்கல் இடுதல்' என்ற இச்சடங்கு வழிபடுபவனுக்கும் தெய்வத்திற்குமிடையே உளவியல் நிலையில் நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்துகின்றது. எனவே தான் தத்துவப் போதகர் (இராபர்ட்-டி-நொபிலி) என்ற சேசு சபைக் குரு சிலுவையை நட்டு அதன் முன் பொங்கலிடக் கத்தோலிக்கர்களுக்கு அனுமதி வழங்கினார். இன்றும்கூட அந்தோணியார், செபஸ்தியார் போன்ற புனிதர்களைப் பாது காவலர்களாகக் கொண்ட தேவாலயங்களில் கத்தோலிக்கர்கள் பொங்கலிட்டு வழிபடுகின்றனர். இது தமிழக நாட்டார் சமயத்தின் தாக்கமாகும்.

அம்மை, காலரா போன்ற தொற்றுநோய்கள் பரவும் பொழுது தென்மாவட்டக் கிராமப் பகுதிகளில் பட்டைக்கஞ்சி ஊற்றுதல் என்ற சடங்கு நாட்டார் தெய்வக் கோவில்களில் நிகழும். வீடுவீடாக அரிசியைச் சேகரித்து அதைக் கோவிலின் முன் பெரிய பாத்திரத்தில் இட்டுக் கஞ்சி காய்ச்சி, பனை வோலைப் பட்டைகளில் ஊரார் அனைவருக்கும் வழங்குவர் (தகவல் : பெ. கணபதி சுப்ரமணியன்). கரிசல் நிலப் பகுதிகளில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொடர்ந்து மழை பெய்யாவிடில் மழைக்கஞ்சி காய்ச்சுதல் என்ற சடங்கு நிகழும். வீடுவீடாகச் சென்று பல்வேறு புஞ்சைத் தானியங்களைச் சேகரித்து மாவாக்கி, உப்பிடாது கஞ்சி காய்ச்சி அனைவரும் உண்பர். கொங்குப் பகுதியிலும் இத் தகைய சடங்கு நிகழ்கிறது.

**சைவர்களும் சமபந்தியும்**

வேத சமயமான பிராமணியச் சமயத்தைப் பின்பற்றுபவர் கள் மட்டுமின்றி, சைவ சமயத்தினரும் சமபந்திக்கு எதிரான வர்களாகவே இருந்தனர். சைவத்தை நிலைநிறுத்த வந்தவ ரென்று ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் போற்றப்படும் ஆறுமுக நாவலர் 'சைவ விரோதம்' என்ற தலைப்பில் எழுதியுள்ள செய்திகள் வருமாறு:

> தங்கள் வீடுகளிலே கிறிஸ்தவர்களை உடனிருந்து போசனம் செய்கிறார்கள்; தங்களுடைய வீட்டு நிலம், தூண், சுவர், பாத்திரங்கள் முதலானவை எல்லாம் கிறிஸ் தவர்களுடைய எச்சிலாக்கி விடுகிறார்கள். தங்களுக்குச் சமையல் பண்ணுகிற கோவியர்கள், கிறிஸ்தவர்களுடைய கல்யாண வீடுகளிலே அவர்கள் பாத்திரங்களிலே சமையல் செய்து அவர்களுக்குப் படைத்துத் தாங்களும் போசனம் செய்துவரக் கண்டும் கேட்டும், அந்தக் கோவியரைக் கொண்டு தாங்கள் சமையல் செய்வித்து போசனம் செய் கிறார்கள். (கைலாசம் பிள்ளை 1954 : 22)

இருபத்து நான்கு வகையான 'அநாசாரம்' (ஒழுக்க மின்மை) குறித்துப் பட்டியலிடும் ஆறுமுக நாவலர் மூன்றா வது அநாசாரமாகக் குறிப்பிடும் செய்தி வருமாறு:

> ......மாமிசம் புசிப்பவர், கள்ளுச் சாராயம் குடிப் பவர், தாழ்ந்த சாதியார், அந்நிய சமயிகள் என்கிற இவர் களிடத்தாவது இவர்களுடன் இருந்தாவது இவர்கள் காணவாவது போசனம் பண்ணுதல். (மேலது)

மேலும் சைவர்களின் போசனப் பந்தியைப் பார்க்கத் தகா தவர் யாரென்று பட்டியலிடும் ஆறுமுக நாவலர் அப்பட்டிய லில் விதவைகளைத் திருமணம் செய்தோரையும் விதவைகளின் பிள்ளைகளையும் குறிப்பிடுகிறார்.

தூத்துக்குடி நகரிலுள்ள சைவ சித்தாந்த சபையில் சமய உரையாற்ற 1910ஆம் ஆண்டில் மறைமலையடிகள் சென்றார்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


சொற்பொழிவு முடிந்தவுடன் சொற்பொழிவாளரனைவரும் உணவு அருந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சைவ வேளாளர் குடும்பத்தில் பிறந்த சொற்பொழிவாளர்கள் முதல் பந்தியிலும் ஏனைய சொற்பொழிவாளர்கள் இரண்டாவது பந்தியிலும் உண்ணவேண்டுமென்று அமைப்பாளர்கள் கூறியபோது மறைமலையடிகள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் நடத்திய 'ஜனசாகரம்' என்ற பத்திரிகையில் இதைக் கண்டித்து அவர் எழுதிய நீண்ட கட்டுரையே பின்னர் 'சாதி வேற்றுமையும் போலிச் சைவரும்' என்ற தலைப்பில் நூலாக வந்தது. தமிழ்நாட்டுச் சைவ மடங்களிலும் இத்தகைய போக்கே நீடித்தது.

சமபந்தி முறையை விரும்பிய ஒன்றிரண்டு சைவ சமய மடாதிபதிகளும் அதை வெற்றிகரமாக நடத்தமுடியாமல் தோல்வியுற்றனர்.

காசியில் வாழும் தமிழ்ப் பிராமணர்கள் இலவசமாக உணவருந்துவதற்கு அங்குள்ள குமாரசுவாமி மடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்காகும் செலவை இரண்டாம் சரபோஜி (1798-1832) மன்னர் வழங்கி வந்தார். காசி மடத்திலிருந்த அருணாசலத் தம்பிரான் என்பவர், நரசு என்ற கன்னார் வகுப்பைச் சேர்ந்த ஒருவரைப் பிராமணர்களின் வரிசையில் அமர்ந்து உணவு உண்ணும்படிச் செய்தார். இதனால், பிராமணர்கள் அனைவரும் குமாரசுவாமி மடத்தில் உணவருந்துவதைத் தவிர்த்தனர். இதையறிந்த பெரிய தம்பிரான் வழக்கப்படி, பிராமணர்கள் தனியாக உணவருந்தும் முறையை மீண்டும் ஏற்படுத்தினார். இச்செய்திகளை இரண்டாம் சரபோஜி மன்னருக்குக் கடிதத்தின் வாயிலாகப் பிராமணர்கள் தெரிவித்தனர். இக்கடிதத்தின் இறுதிப் பகுதியில்

> ...பிராமணர்களுக்குத் தொந்திர வன்னியில் தினமும் சாப்பாடு போடும்படியாகச் செய்யவேண்டும். தாங்கள் தருமமாக இராஜ்யஞ் செய்து, காசிஷேத்திரத்தில் அன்ன தானத்தையும் செய்வித்து. அநேக பிராமணர்கள் காசி வாசஞ்செய்துகொண்டிருக்கையில் இந்த விக்னம் ஏற்பட்டிருக்கிறது. இதை நிவாரணஞ் செய்து பிராமணர்களின் உத்தாரம் செய்யவேண்டும். (சுப்பிரமணியன் 1989 : 9-10)

என்ற வேண்டுகோளும் இடம் பெற்றுள்ளது.

குன்றக்குடி அடிகளார், குன்றக்குடி ஆதீனத் தலைவராகப் பொறுப்பேற்கும் முன்னர் இளைய தம்பிரானாகத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திருவண்ணாமலையில் தங்கி, வஜ்ஜிரவேலு முதலியாரென்ற சைவ சித்தாந்த அறிஞரிடம் பாடம் கேட்டு வந்தார். பாடம் முடிந்தவுடன் அடிகளார் தனியாகவும் வஜ்ஜிரவேலு முதலியார் தனியாகவும் உணவருந்தி வந்தனர். சில நாள்களில் இம்மரபை உடைத்துத் தன்னுடன் வஜ்ஜிரவேலு முதலியார் அவர்களையும் உடன் அமரச்செய்து அடிகளார் உணவு அருந்தி வரலானார். இச்செய்தி சமையற்காரரர் வாயிலாகக் குன்றக்குடியின் தலைமை மடாதிபதியை எட்டியதும் அவர் இதைத் தடுத்து நிறுத்தியதுடன் இதுவரை நடந்த செயலுக்குப் பரிகாரமாக பஞ்சகவ்வியம் (பசுவின் பால், தயிர், நெய், மூத்திரம், சாணம்) அருந்தும்படி அடிகளாருக்குக் கட்டளையிட்டார் (தகவல் : தொ.மு.சி. ரகுநாதன்).

**கிறித்தவமும் சமபந்தியும்**

ஐரோப்பாவிலிருந்து இங்கு பரவிய கிறித்தவம் தனது வழிபாட்டில் 'நற்கருணை' என்ற சடங்கைக் கொண்டிருந்தது. இச்சடங்கில் திராட்சை ரசத்தை யேசுநாதரின் இரத்தமாகவும் புளிக்காத கோதுமை அப்பத்தை அவரது மாமிசமாகவும் பாவித்து குருவானவர் தேவாலயத்தில் வழங்குவார். பல்வேறு சாதியினரும் ஒன்றாகக் கலந்து வழிபடும் இடத்தில் நிகழும் இச்சடங்கு 'சாதிக்கொரு பந்தி' என்ற தமிழ்நாட்டின் பாரம்பரியத்துக்கு மாறானது. இத்தற்காலிகச் சமத்துவத்தைக்கூட மதம் மாறிய முற்படுத்தப்பட்ட சாதியினர் ஏற்றுக்கொள்ளாததால் ஒடுக்கப்பட்ட சாதிப் பிரிவைச் சார்ந்த கிறித்தவர்களுக்குத் தனியாக நற்கருணை வழங்கும் முறை உருவாகியது.

மேலும் உணவு உண்பது தொடர்பாகத் தமிழ்ச் சமூகத்தில் நிலவிய கட்டுப்பாடுகளை ஐரோப்பாவிலிருந்து வந்த குருக்களும் பின்பற்றவேண்டுமென்று இந்தியாவிலிருந்த கிறித்தவ மதத் தலைமை வற்புறுத்தியது.

பவோன் என்ற கத்தோலிக்கக் கிறித்தவ பாதிரியார், நல்ல சாதியிலிருந்து சமையல்காரரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும்படியும் உணவு அருந்துவதையும் பருகுவதையும் பிறர் பார்க்காதவாறு நடந்துகொள்ளவேண்டுமென்றும் பயணத்தின் போது திரைக்குப் பின்னிருந்து உண்ணவும் பருகவும் வேண்டுமென்றும் பிராமண மிஷினரிகளுக்கு (Ferroli 1955 : 136) அறிவுரை கூறியுள்ளார்.

சீர்திருத்தக் கிறித்தவ சபையில் இத்தகைய சாதி வேறுபாடு தொடக்கக் காலத்தில் நிலவியது. சென்னையில் வேப்பேரிப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பகுதியிலுள்ள தேவாலயத்தில், ஆதிராவிடக் கிறித்தவர்களுக்கும் உயர்சாதிக் கிறித்தவர்களுக்கும் தனித்தனி நாள்களில் திவ்ய நற்கருணை வழங்கப்பட்டது. ஆதிதிராவிடருடன் இணைந்து நற்கருணை பெறுவதை உயர்சாதிக் கிறித்தவர்கள் விரும்பாமையே இதற்குக் காரணமாகும். நல்லதம்பி என்பவர் 1854இல் குருபட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சாதி வேறுபாடு பாராட்டாதவர் என்பதனை உறுதிப்படுத்தும் முகமாக ஆதிதிராவிடர் சாதியைச் சேர்ந்த சமையற்காரர் தயாரித்த தேநீரை அருந்தும்படி ஒக்ஸ் (Ocus) என்ற ஐரோப்பியப் பாதிரியார் அவரை வற்புறுத்தினார். "நல்ல தம்பி மறுத்தார். மற்ற மிஷனெரிகள் அது தேவையில்லையென்று சாதித்தனர். உடனே மிஷனெரிகளுக்குள் சர்ச்சை உண்டாகி அது லிப்சிக் வரை சென்று அங்கும் பிரிவினை உண்டாகச் செய்தது. கடைசியில் நல்ல தம்பிக்கே வெற்றி."

19ஆம் நூற்றாண்டில் சீர்திருத்தக் கிறித்தவர்கள் பாளையங்கோட்டை நகரில் மாணவர் விடுதி ஒன்றை நடத்தி வந்தனர். 1821ஆம் ஆண்டில் 12 நாடார் சாதிச் சிறுவர்கள் இவ் விடுதியில் சேர்க்கப்பட்டார்கள். ஏற்கனவே அங்கிருந்த வெள்ளாள மாணவர்கள் அவர்களுடன் அமர்ந்து உணவருந்த மறுத்துவிட்டார்கள். நாடார் சாதிப் பையன்களோ பறையர் இனப் பையன்களோடு அமர்ந்து உணவருந்த மறுத்துவிட்டனர். இதன் விளைவாக மாணவர் விடுதி மூடப்பட்டது. 1822இல் இவ்விடுதி மீண்டும் திறக்கப்பட்டது. சாதி வேற்றுமையைக் கடுமையாக எதிர்க்கும் இரேனியஸ் பாதிரியாரின் முயற்சியால் சாதியப் பாகுபாடு களையப்பட்டது (அப்பாசாமி 1923 : 37-38).

பாளையங்கோட்டை நகரில் சீர்திருத்தக் கிறித்தவர்களின் இறையியல் கல்லூரி ஒன்று செயல்பட்டு வந்தது. இங்கு வெள்ளாளர் ஒருவர் சமையல்காரராக இருந்தார். 1846இல் அவர் திடீரென்று வேலைக்கு வரவில்லை. அவருக்கு மாற்றாக, பறையர் ஒருவர் சமையல்காரராக அனுப்பப்பட்டார். இதன் விளைவாக அங்கு தங்கியிருந்த 35 மாணவர்களில் 34 பேர் வெளியேறிவிட்டார்கள். மறைப் பணியாளர்கள் உறுதியாக நின்றதால் வெளியேறிய மாணவர்கள் சில நாள்களில் மீண்டும் விடுதிக்கு வந்தார்கள் (மேலது: 102-103).

ஐரோப்பாவிலிருந்து வந்த பாதிரியார்கள் சமபந்திக்கு ஆதரவான நிலையிலிருந்தாலும் அவர்களிடம் பணிபுரிந்த உபதேசியார்கள் (catechist) சமபந்தியை விரும்பாதவர்களாகவே இருந்தனர். வேதமுத்து என்ற உபதேசியார் மறைப் பணிக்காகச் சென்றபோது கையில் அரிசி எடுத்துச்சென்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிணற்றருகில் வைத்துத் தானே சமைத்துச் சாப்பிட்டார். ஏனெனில் அவர் மறைப் பணியாற்றச் சென்ற இடம் விஜயராமபுரம் என்ற நாடார் குடியிருப்பாகும் (கால்டுவெல் 1881 : 59).

திருநெல்வேலி மாவட்டத்தில் நாடார் உபதேசி ஒருவரும் வெள்ளாள உபதேசி ஒருவரும் ஒன்றாக மறைப் பணியாற்றச் சென்றனர். வெள்ளாள உபதேசியாரின் வீட்டிற்கு இருவரும் சென்றவுடன் நாடார் உபதேசிக்கு வெள்ளாள உபதேசியின் மாட்டுத் தொழுவத்தில்[4] உணவு பரிமாறப்பட்டது (Sharrok: 1910).

பரிசேயர்களை 'வெளிவேடக்காரர்', 'வெள்ளையடிக்கப் பட்ட கல்லறை போன்றவர்', 'குருட்டு வழிகாட்டிகள்', 'விரியன் பாம்புக் குட்டிகள்' என்றெல்லாம் யேசு கடுமையாகப் பழித்துரைத்துள்ளார். ஆனால் பரிசேயரின் வீட்டிலும் (லூக்கா 7 : 36) பரிசேயர்களின் தலைவன் ஒருவன் வீட்டிலும் (லூக்கா: 14 : 1) உணவருந்தியுள்ளார். ஒதுக்கப்பட்ட சமாரி யப் பெண்ணிடம் தண்ணீர் கேட்டுக் குடித்துள்ளார் (யோவான் 4 : 9-10).

ஆனால், அவரைப் பின்பற்றுவோர் அனைத்துச் சாதி யினருடனும் கலந்து உண்ணுவதைத் தவிர்த்துள்ளனர். இன்றும்கூட மேட்டுக்குடிக் கிறித்தவர்கள் 'நற்கருணை' வாங்கிய பின்புதான் தலித் கிறித்தவர்கள் நற்கருணை வாங்க வேண்டுமென்ற நடைமுறை சில தேவாலயங்களில் வழக்கி லுள்ளது.

**சமபந்தியை வலியுறுத்திய சமயங்கள்**

இவ்வாறு இந்த நாட்டின் பாரம்பரியச் சமயமும் ஐரோப் பாவிலிருந்து இங்கு பரவிய கிறித்துவமும் சாதியத்தை உணவு உண்பதிலும்கூட விட்டுவிடத் தயாராக இல்லாத நிலையில் வேறு சில சமயங்கள் சமபந்தியை வலியுறுத்தின. அரேபியாவி லிருந்து இங்கு பரவிய இசுலாம் சாதியத்திலிருந்து தன்னைத் துண்டித்துக்கொண்டது. இசுலாமிய வழிபாட்டுத் தலங் களுள் ஒன்றான தர்காவில் நிகழும் 'கந்தூரி' விருந்தில் சாதிய வேறுபாடுகளை மட்டுமின்றி, பொருளியல் வேறுபாடுகளையும் கூட அது ஒதுக்கிவைத்தது. இசுலாமியர்களும் அவர்களுக்கு நெருக்கமான பிற சமயத்தவர்களும் ஒன்றாக அமர்ந்து கந்தூரி விருந்து உண்பதை இன்றும் காணலாம். ரம்சான் நோன்பை ஒட்டி, பள்ளிவாசலில் கஞ்சி வழங்குவதிலும் வேறுபாடு எது வும் கிடையாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தென்னாட்டில் உருவான பல சமயச் சீர்திருத்த இயக்கங்களும் சமபந்தியை வலியுறுத்தின. கேரளத்தில் நாராயணகுரு 1919ஆம் ஆண்டில் சமபந்தியை நடத்திக் காட்டினார். குமரி மாவட்டத்தில் தோன்றிய வைகுண்டசாமி 'துவையல் பந்தி' என்ற பெயரில் சமபந்தி முறையை உருவாக்கினார். இதை விரும்பாத தன் சீடர்களுக்கு, சமபந்தியை வலியுறுத்தி அவர்கள் ஏற்றுக்கொள்ளும்படி செய்தார். இதுபோல் இராமலிங்க அடிகளாரும் அவர் நிறுவிய தர்ம சாலையில் சாதிமத பேதமின்றி அனைவரும் உணவு அருந்தும் முறையை உருவாக்கினார். இது தொடர்பாக அவர் கூறியுள்ள பின்வரும் கூற்று அவரது சமத்துவ உணர்வையும் அருள் உள்ளத்தையும் வெளிப்படுத்தி நிற்கிறது:

> பசியினால் வருந்துகின்றவர்கள் எந்தத் தேசத்தாராயினும் எந்தச் சமயத்தாராயினும் எந்த சாதியாராயினும் எந்தச் செய்கையாராயினும் அவர்கள் தேசவொழுக்கம், சமயவொழுக்கம், ஜாதியொழுக்கம், செய்கையொழுக்கம் முதலானவைகளைப் போதித்து விசாரியாமல், எல்லா ஜீவன்களிடத்தும் கடவுள் விளக்கம் பொதுவாக விளங்குவதை அறிந்து, பொதுவாகப் பார்த்து, அவரவர் ஒழுக்கத்திற்குத் தக்கபடி அவர்கள் பசியை நிவர்த்தி செய்விப்பதே ஜீவகாருண்யம். (வள்ளலார் 1994)

வடபுலத்தில் தோன்றிய சீக்கிய சமயமும் தனது அடிப்படைக் கோட்பாடுகளுள் ஒன்றாகச் சமபந்தியைக் கொண்டுள்ளது. சமையல் பாத்திரங்களை வைப்பதற்காக இரும்பு அல்லது எஃகினால் செய்யப்பட்ட பாத்திரத்திற்குப் பாரசீக மொழியில் 'லங்கர்' என்று பெயர். 'லங்கர் என்ற சொல்லால் அன்னசாலை ஒன்றைச் சீக்கிய சமயத்தின் நிறுவகரான குரு நானக் ஏற்படுத்தினார். அவரைச் சந்திக்க வரும் பார்வையாளர்களுக்கும் பக்தர்களுக்கும் உதவ அவர் உருவாக்கிய இச் சமையலறை 'குரு-கா-லங்கர்' என்று பெயர் பெற்றது.

நேர்மையான வழியில் தன் உணவைத் தேடுதலும் அதைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளுதலும் தன் வருவாயில் பத்தில் ஒரு பகுதியை உயரிய செயல்களுக்கு வழங்குதலும் ஒவ்வொரு சீக்கியனது கடமையென்று குருநானக் கட்டளையிட்டார். இக்கட்டளையே 'லங்கர்' என்ற பொதுச் சமையல் அறை உருவாக அடிகோலியது.

மூன்றாவது குருவான உமர்தாஸ் காலத்தில் ஒவ்வொரு சீக்கியரும் சாதி சமயக் கோட்பாடு—உயர்ந்தவன் தாழ்ந்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


தவன் என்ற வேறுபாடின்றி அமர்ந்து உணவு உண்ணும் பந்தி முறையை லங்கரில் ஏற்படுத்தினார். லங்கரில் அமர்ந்து உணவு உண்ட பின்னரே குருவைச் சந்திக்க முடியும். சமத்துவத்தையும் சகோதரத் தத்துவத்தையும் வலியுறுத்தவே இம்முறை உருவாக்கப்பட்டது. லங்கர் பந்தியில் அமர்ந்து உணவு உண்ட பின்னரே முகலாயப் பேரரசர் அக்பர் சீக்கியக் குருவைச் சந்தித்தார். லங்கர் நிர்வாகத்தின் மீது மனநிறைவு கொண்ட அவர் 12 கிராமங்களின் வருவாயை லங்கரின் செலவுகளுக்காக வழங்க முன்வந்தார். ஆனால், மக்களின் நேர்மையான வருவாயிலிருந்துதான் லங்கர் நடக்கவேண்டுமென்று கூறி, சீக்கிய குரு அதை மறுத்துவிட்டார்.

லங்கர் நிறுவனமானது உணவு, உறையுள் இரண்டையும் உள்ளடக்கியது. முடிந்த இடங்களில் முதலுதவியும் வழங்கியது. மனித குலத்தில் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் தேவை உள்ளவர்களுக்கும் சாதி சமய வேறுபாடின்றி உதவுவதே லங்கரின் அடிப்படை நோக்கமாகும். ஒரே வரிசையிலமர்ந்து ஒரே உணவை அனைவரும் உண்ணும்போது ஏழை—பணக்காரன், உயர்ந்தவன்—தாழ்ந்தவன், இன்ன சமயத்தவன் என்ற வேறுபாடுகள் நீங்கிவிடுவதாகச் சீக்கியம் கருதியது (Hardit Sing 1998 ; 54-57).

லங்கரின் பணிகளைச் சீக்கியர்கள் ஊதியமின்றி மேற்கொள்கின்றனர். சிலர் கிணற்றிலிருந்து தண்ணீர் இரைப்பர்; சிலர் தானியங்களைத் திரிப்பர்; சிலர் காட்டிற்குச் சென்று விறகு கொண்டுவருவர்; சிலர் உணவு தமைப்பர்; சிலர் பாத்திரங்களைக் கழுவுவர்; சிலர் விசிறி கொண்டு வீசுவர். பதவி, சாதி வேறுபாடின்றி லங்கரில் சமைத்த உணவைப் பந்தியிலமர்ந்து உண்ணுவதால், லங்கர் என்றழைக்கப்படும் சமுதாயச் சமையல் கூடம் சமத்துவம், தன்னடக்கம் ஆகியவற்றை வழங்குவதாக ஹர்பான்ஸ் சிங், லால்மணி ஜோஷி (1973 : 198-199) ஆகிய இருவரும் குறிப்பிடுகின்றனர்.

**விடுதலை இயக்கமும் சமபந்தியும்**

எண்ணிக்கையில் அதிகமான தாழ்த்தப்பட்டோரை இந்திய விடுதலை இயக்கத்தில் இணைத்துக்கொள்வதன் அவசியத்தை உணர்ந்த காந்தியார், காங்கிரசின் செயல்திட்டங்களுள் ஒன்றாக ஹரிஜனச் சேவையினை அறிமுகப்படுத்தினார். 'சமபந்தி போஜனம்' என்ற பெயரில் ஹரிஜனங்களும் ஏனைய சாதியினரும் ஒன்றாக அமர்ந்து உணவுண்ணும் நிகழ்ச்சியும் ஹரிஜனச் சேவையின் ஒரு பகுதியாக உருப்பெற்றது.

www.tamilarangam.net


ஏனைய சாதியினருடன் ஒன்றாக அமர்ந்து உண்டோம் என்ற போலிப் பெருமையைத் தாழ்த்தப்பட்டோருக்கு வழங்கு வதாகவே இது நடைமுறையில் அமைந்தது. காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்த பலர், உண்மையில் சமபந்தியில் விருப்ப மில்லாதவர்களாகவே இருந்தனர்.

1901ஆம் ஆண்டு, கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்ட காந்தி (1998 : 270) தமது சுயசரிதையில், தமிழ்நாட்டி லிருந்து வந்த காங்கிரஸ் பேராளர்களின் செயலை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்:

> தமிழர்களின் சமையல்கூடம் மற்றவர்களின் சமையல் கூடத்திற்குத் தொலைவில் தனியாக இருந்தது. தாங்கள் சாப்பிடுவதைப் பிறர் பார்த்துவிட்டால்கூடத் தோஷம் என்று தமிழ்ப் பிரதிநிதிகள் கருதினார்கள். எனவே, அவர்களுக்கு என்று தனியான சமையல்கூடத்தைக் கல் லூரி மைதானத்தில் அமைத்திருந்தார்கள். நாற்புறமும் தட்டி வைத்து இந்தக் கூடம் கட்டப்பட்டிருந்தது. அதில் ஒரே புகை; யாரையும் மூச்சுத் திணறச் செய்துவிடும். சமைப்பது, சாப்பிடுவது, கையலம்புவது எல்லாம் அதற் குள்ளேதான். திறப்பே இல்லாத இரும்புப் பெட்டிபோல் இருந்தது அந்த இடம். இது வருண தருமத்தின் சீர்கேடா கவே எனக்குத் தோன்றிற்று. காங்கிரசின் பிரதிநிதி களுக்குள்ளே இத்தகைய தீண்டாமை இருந்துவருகிறதென் றால், இவர்கள் யாருக்குப் பிரதிநிதிகள் என்று வந்திருக் கிறார்களோ அந்த மக்களிடம் தீண்டாமை இன்னும் எவ் வளவு மோசமாக இருந்து வருகிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம் என்று எனக்குள்ளேயே சொல்லிக்கொண் டேன். இதை எண்ணியதும் பெருமூச்சுவிட்டேன்.

காந்தி தன்னளவில் சமபந்தியைக் கடைப்பிடித்தாலும் அதைக் காங்கிரஸ் இயக்கத்தார் அனைவரும் பின்பற்ற வேண்டுமென்று வற்புறுத்தவில்லை.

> தீண்டாமையை ஒழிப்பதற்கு சமபந்தி போஜனமும் கலப்பு மணமும் அவசியமானவை என்று நாம் கருத வில்லை.
>
> என் ஆசிரமத்தில் உள்ள 'தீண்டாதார்'களில் ஒருவ ரான தூதாபாய் யாதொரு வேற்றுமையுமின்றி மற்றவர் களுடன் உட்கார்ந்து உணவு அருந்துகிறார். ஆனால், இந்த உதாரணத்தைப் பின்பற்றும்படி ஆசிரமத்துக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



> வெளியிலுள்ள எவருக்கும் நான் சிபார்சு செய்யமாட்டேன் (வேங்கடராஜுலு 1961 : 141)

என்று அவர் கூறியுள்ளமை சமபந்தியை அவர் ஒரு முக்கியச் சீர்திருத்தமாகக் கருதவில்லை என்பதை உணர்த்துகிறது. அவர் நடத்திய 'யங் இந்தியா' (Young India 19-3-1925) இதழில் அவர் எழுதியுள்ள பின்வரும் குறிப்பு, சமபந்தியைக் குறித்து அவர் கவலைப்படவில்லை என்பதையும் எல்லோருக்கும் நல்ல பிள்ளையாக நடந்துகொள்ள விரும்பினாரோ என்ற ஐயப்பாட்டைத் தோற்றுவிப்பதாகவும் அமைந்துள்ளது:

> என் சம்பந்தப்பட்ட வரையில், சமபந்தி போஜனம் ஓர் அவசியமான சீர்திருத்தம் என்று நான் நிச்சயமாகச் சொல்லமுடியாது. அதே சமயத்தில், அந்தக் கட்டுப் பாட்டை அடியோடு தகர்க்கும் மனப்பான்மை நிலவிவரு வதை நான் உணருகிறேன். அந்தக் கட்டுப்பாட்டுக்குச் சாதகமாகவும் சரி, பாதகமாகவும் சரி, நான் காரணங்கள் கண்டுபிடிக்கமுடியும். எனினும், அந்தக் கட்டுப்பாட்டை ஒழிக்க நான் அவசரப்படமாட்டேன். ஒருவர் மற்றொரு வருடன் சேர்ந்து சாப்பிட மறுப்பதை நான் ஒரு பாவ மாகக் கருதவில்லை. அதுபோலவே, ஒருவர் சமபந்தி போஜனத்தை ஆதரிப்பதையும் அதை அனுஷ்டிப்பதையும் ஒரு பாவமாக நான் கருதவில்லை. ஆனால், மற்றவர் களின் உணர்ச்சிகளைப் பொருட்படுத்தாமல் அந்தக் கட்டுப்பாட்டைத் தாக்கும் முயற்சியை நான் எதிர்க்கத் தான் வேண்டும். அதற்கு மாறாக நான், அத்தகையோரின் உணர்ச்சிகளை மதித்து நடப்பேன். (ரா. வேங்கடராஜுலு 1961 : 146).

1922ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சேரன்மாதேவியில் 'பரத்வாஜ ஆஸ்ரமம்' என்ற பெயரில் குருகுலமொன்றை வ.வே.சு. அய்யர் நிறுவினார். இக்குருகுலத்திற்கு நிலம் வாங்குவதற்கு நாட்டுக்கோட்டைச் செட்டியார் ஒருவர் நிதியுதவி செய்தார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி பத்தாயிரம் ரூபாய் தருவதாக வாக்களித்து முதல் தவணையாக ரூபாய் 5,000/- வழங்கியது. இக்குருகுலத்தில் பயின்று வந்த இரண்டு பிராமண மாணவர்கள் பிராமணர் அல்லாத மாணவருடன் கலந்து உணவு அருந்தவில்லை. அவர்களுக்குச் சமையல் பொருள்களைச் சேமித்து வைக்கும் அறையில் தனி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாக உணவு பரிமாறப்பட்டது. பிராமண மாணவர்களுக்கு உப்புமாவும் பிராமணர் அல்லாத மாணவர்களுக்குப் பழைய சோறும் வெவ்வேறு இடங்களில் வழங்கப்பட்டன. பிராமண மாணவர்களுக்கு வேதபாராயணமும் மற்றவர்களுக்குத் தேவாரம், திருவாசகமும் கற்றுக்கொடுக்கப்பட்டன.

பிராமண மாணவர்களும் பிராமணர் அல்லாத மாணவர்களும் நீர் பருகத் தனித்தனியாகத் தண்ணீர்ப் பானைகள் வைக்கப்பட்டிருந்தன. இங்கு தங்கிப் பயின்ற ஓமந்தூர் பி.ராமசாமி ரெட்டியாரின் பையன், பிராமண மாணவர்களுக்கென்று வைக்கப்பட்டிருந்த தண்ணீர்ப் பானையில் நீர் எடுத்தமைக்காகக் கடுமையாகக் கண்டிக்கப்பட்டான் (சண்முகசாமி 1986 : 49-50).

அங்கு பயின்றுவந்த பிராமணர் அல்லாத மாணவர்களின் பெற்றோர்களுக்கு இச்செய்தி எட்டியது. பின்னர், தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் தலைவராகயிருந்த டாக்டர் வரதராஜுலு நாயுடுவையும் சென்றடைந்தது. பெரியார் ஈ.வெ.ரா., திரு. வி.க., தண்டபாணிப்பிள்ளை போன்ற காங்கிரஸ்காரர்களும் இதையறிந்தனர். காங்கிரசிடமிருந்து நிதியுதவி பெறும் ஒரு நிறுவனத்தில் சமபந்தி முறை நிலவாதது கண்டு அதிர்ச்சியடைந்தனர். பிராமண மாணவர்களுக்குத் தனிப் பந்தியில் உணவு பரிமாறும் முறையை மாற்றிச் சமபந்தி நடத்தும்படி கூறினர்.

வ.வே.சு. அய்யர் சமபந்தியைக் குருகுலத்தில் நடைமுறைப்படுத்தவில்லை. எனவே, இப்பிரச்சனை காந்தியிடம் எடுத்துச்செல்லப்பட்டது. காந்தி இது தொடர்பாக மூன்று திட்டங்களை முன்வைத்தார். 1 குருகுலவாசிகள் அனைவரும் ஒன்றாக அமர்ந்து உண்ணவேண்டும்; 2 பிராமணர்கள் மட்டுமே சமையல்காரர்களாக இருக்கவேண்டும்; 3 முக்கியச் சந்தர்ப்பங்களில் வெளியில் வசிக்கும் மாணவர்களும் குருகுலத்தில் அனுமதிக்கப்படவேண்டும் (சண்முகசாமி 1986 : 60). ஆனால், வ.வே.சு. அய்யர் சமபந்தி நடத்த முடியாதென்பதில் உறுதியாக நின்றுவிட்டார். இதற்குப் பதிலடியாக, வாக்களித்த 10,000 ரூபாயில் முதலில் தந்த ரூ. 5,000 போக எஞ்சிய ரூ. 5,000த்தைத் தர வரதராஜுலு நாயுடு மறுத்துவிட்டார். வன்முறைப் புரட்சியாளராகப் போற்றப்படும் வ.வே.சு. அய்யர் சனாதனக் கண்ணோட்டத்திலிருந்து விடுபடாதவராக இருந்ததை இந்நிகழ்ச்சி விளக்குகிறது.[5]

1938ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டம் நீடாமங்கலத்தில் காங்கிரசின் சார்பில் அரசியல் மாநாடு ஒன்று நடந்தது. அம்மாநாட்டில் மூன்று ஆதிதிராவிடர்கள் கலந்துகொண்டார்கள்.

www.tamilarangam.net



உணவு நேரத்தில் அம்மூவரும் போய் மற்றவர்களோடு உண வருந்திக்கொண்டிருந்தனர். பண்ணை ஏஜெண்ட் ஒருவர் அவர்களைப் பார்த்து, அடித்து விரட்டிவிட்டார். மாநாடு முடிந்த மறுநாள் மூன்று ஆதிதிராவிடர்களும் அறுவடை செய்துகொண்டிருந்தார்கள். அப்போது அங்கு வந்த அனு மந்தபுரம் பண்ணை கிருஷ்ணமூர்த்தி அய்யர் "நேற்று மாநாட் டில் போய் சாப்பிட்ட பயல்களையெல்லாம் இங்கே உதைத்துக் கொண்டு வா" என்றார். அப்படியே அவர்களை உதைத்து மரத்தில் கட்டினார்கள். உடனே ஏறத்தாழ இருபது பேர் களை மொட்டையடித்தார்கள். திருமணமாகாதவர்களுக்கு அரை மொட்டையடித்தார்கள். சாணிப்பால் ஊற்றினார்கள் (சுந்தரவடிவேலு 1979 : 93).

**உணவு விடுதிகளில் சாதியம்**

ஆங்கில ஆட்சியில் ஏற்பட்ட சமூக மாறுதல்களில் ஒன் றாக உணவை விற்கும் உணவு விடுதிகள் உருவாயின. இவ் உணவு விடுதிகளை உருவாக்கி நடத்தியவர்கள் சாதி ஆச்சாரத்தைப் பாதுகாப்பதில் முக்கியக் கவனம் செலுத் தினர்.

தஞ்சை மாவட்டத்தின் கிராமப்புறங்களில் இருந்த உணவு விடுதிகளின் நிலை குறித்து,

> நாடெங்கிலும் டீக்கடைகள் உண்டானபோது சேரி மக்கள் இட்டலி தின்பதற்கும் டீ குடிப்பதற்கும் கடை ஓரமாகவே சாப்பு இறக்கி இருப்பார்கள். அதில் தரையில் தான் அவர்கள் உட்காரவேண்டும்.
>
> அவர்கள் டீ குடிப்பதற்காகவே டவரா செட்டு ஒன்று தனியாக இருக்கும். டீ குடிப்பவர்கள், குடித்தவுடன் அதைக் கழுவிக் கம்பில் தொங்கவிட்டுப்போவார்கள். அடுத்து வருபவர்கள் அதை எடுத்து ஊற்றும் டீயை வாங் கிக் கொள்வார்கள். மற்றவர்கள் குடிக்கும் செட்டில் சேரி மக்களுக்குக் கொடுக்கக்கூடாது.
>
> சேரி மக்கள் தண்ணீர் குடிப்பதற்காக வாழை மட் டையை இணைத்து வெளியே கட்டி இருப்பார்கள்.[6] அவர் கள் தண்ணீர் கேட்கும்போது உள்ளே இருந்து ஊற்று வார்கள். மட்டையில் வரும் தண்ணீரை ஒரு கை விரல் களை இறுக்கிக் குழித்து வாயோடு சேர்த்துவைத்துக் குடிக்கவேண்டும்

என்று சந்திரபோஸ் (1999 : 49) கூறுகிறார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தஞ்சை மாவட்டத்தில் மட்டுமின்றி, தமிழ்நாட்டின் கிராமப்புறங்கள் அனைத்திலும் இத்தகைய நிலைதான் நிலவியது. நகர்ப்புறங்களில் சற்று வித்தியாசமான முறை நிலவியது. 'பஞ்சமர்களும் நாய்களும் பெருநோய்க்காரர்களும் நுழையக் கூடாது' என்ற அறிவிப்பு சென்னை நகரின் உணவு விடுதிகள் சிலவற்றில் இடம்பெற்றிருந்தது (சுந்தரவடிவேலு 1979 : 93). சில உணவு விடுதிகளில் பிராமணர்களுக்குத் தனி இடமும் இதரர்களுக்கு வேறு இடமும் ஒதுக்கப்பட்டிருந்தது. 'பிராமணர்கள் சாப்பிடும் இடம்' என்ற அறிவிப்புப் பலகையும் சில உணவு விடுதிகளில் தொங்கவிடப்பட்டிருந்தது. இரயில் நிலையச் சிற்றுண்டிச் சாலைகளிலும் 'இவ்விடம் பிராமணர்களுக்கு' 'இவ்விடம் இதராளுக்கு' என்று எழுதப்பட்டிருந்தது (சாமி சிதம்பரனார் 1997 : 258).

சாதி வேறுபாடின்றி ஒரே குவளையை அனைத்துச் சாதியினரும் பயன்படுத்தும் முறை, விதிவிலக்காகச் சில உணவு விடுதிகளில் இடம்பெற்றிருந்தது. இதைச் சனாதனிகளால் சகித்துக்கொள்ள முடியவில்லை. வடுவூர் துரைசாமி ஐயங்கார் 'மாயா விநோதப் பரதேசி' என்ற நாவலில்,

> ...புருஷர்களோ காப்பிக் கடைகளில் எச்சிலென்பதையே கவனிப்பதில்லை. ஒரு பறையன் வாயில் வைத்து சப்பிக் குடிக்கும் குவளையை உடனே கொண்டு போய் ஒரு தொட்டியில் வைத்திருக்கும் தண்ணீரில் போட்டு அலம்பி இன்னொரு பிராமணருக்குக் கொண்டு போய் வைக்கிறார்கள். அதை அவர் தம்முடைய திருவாயில் வைத்துச் சப்பிக் குடிக்கிறார். (தோதாத்ரி 1982 : 60)

என்று எழுதியுள்ளதை இதற்குச் சான்றாகக் குறிப்பிடலாம். பண்டித அயோதிதாசர் தாம் நடத்திய 'தமிழன்' இதழில் (ஆகஸ்ட் 1910)

> துட்டு கொடுத்து தங்கள் தாகத்திற்குக் காப்பி கேட்கும் கிறிஸ்தவர், பஞ்சமர்க்ள், மகமதியர்கள் இம்மூவகுப்பாருக்கும் அவ்விடத்தில் உள்ளே வரக்கூடாதென்று தங்கள் ஓட்டல் முகப்பில் பலகையில் எழுதித் தொங்க வைத்திருக்கின்றார்கள்

என்று குறிப்பிட்டுள்ளார். காங்கிரஸ் இயக்கத்தினர் தாழ்த்தப்பட்ட மக்களை உயர்த்தப்போகிறோம் என்று விடுதலை இயக்கத்தின்போது கூறியதை விமர்சனம் செய்யும்பொழுது,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



> பஞ்சமர்கள் துட்டு கொடுத்து காப்பி வாங்கி சாப்பிடுவதாயிருப்பினும் பிராமணர்கள் காப்பி ஓட்டல்களில் சாப்பிடப்படாததென்னும் பயிரங்கச் செயலை நடத்திக்கொண்டே தாழ்ந்த வகுப்போரை உயர்த்தப்போகிறோமென்பது என்னக் கூற்றோ விளங்கவில்லை.
> சுதேசப் பிராமணக் காப்பி ஓட்டல்களில் சகல சாதியோரும் வந்து துட்டு கொடுத்து காப்பி சாப்பிடலாம், ஆனால் மகமதியர், பஞ்சமர், கிறிஸ்தவர்களென்போர் மட்டிலும் அவ்விடம் துட்டு கொடுத்தும் சாப்பிடப்படாது

என்றும் அயோத்திதாசர் குறிப்பிட்டுள்ளார் (அலாய்சியஸ் 1999 : 279-280).

இவ்வாறு அயோத்திதாசர் திரும்பத் திரும்பக் கூறுவதற்குக் காரணம், இது ஒடுக்கப்பட்ட மக்களின் சுயமரியாதை உணர்வைப் புண்படுத்தியதுதான்.

**சுயமரியாதை இயக்கமும் சமபந்தியும்**

20ஆம் நூற்றாண்டின் கால் பகுதியில் தமிழ்நாட்டில் உருவான சுயமரியாதை இயக்கம் இந்நிலைக்கு எதிராகக் குரல் எழுப்பியது.

1929இல் சுயமரியாதை இயக்கத்தின் முதல் மாநாடு நிகழ்ந்தது. இம்மாநாட்டில் உணவு விடுதிகளில் தனியிடம் ஒதுக்குவதைக் கண்டித்துப் பின்வரும் தீர்மானங்களை இவ்வியக்கம் நிறைவேற்றியது:

> வகுப்பு பேதம் காண்பிக்கப்படுகிற எல்லா ஓட்டல்களையும் காப்பி கிளப்புகளையும் இந்த மாநாடு கண்டிப்பதுடன் இவ்வித விஷமத்தனமான பேதங்கள் உள்ள ஓட்டல்களுக்கும் காப்பி கிளப்புகளுக்கும் அவ்வவ்விடத்திலுள்ள அதிகாரிகள் லைசென்ஸ் கொடுக்கக்கூடாதென்றும் கேட்டுக்கொள்கிறது.
>
> இரயில்வே அதிகாரிகள் தங்கள் வசத்திலும் மேற்பார்வையிலும் உள்ள சாப்பாட்டுச் சாலைகளிலும் சிற்றுண்டிச் சாலைகளிலும் சாதி, மதம், வகுப்பு, நிறம் முதலியவற்றைப் பொறுத்து எவ்வகையிலும் வேற்றுமையாகப் பயணிகளைப் பாராட்டாமலிருப்பதற்குரிய நடவடிக்கையை உடனே கைக்கொள்ளுமாறும் இவ்விழிவான வேற்றுமையை ஒழிக்க, இரயில்வே ஆலோசனைக் குழுக்களும்

www.tamilarangam.net



இந்திய சட்டசபை மெம்பர்களும் ஏற்பாடுகள் செய்யுமாறும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது. (சுந்தரவடிவேலு 1979 : 64)

சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்த வி.வி. இராமசாமி நாடார், விருதுநகர் நகரசபையின் தலைவராக இருந்தபோது, சாதிபேதம் பாராமல் எல்லாரையும் உணவு விடுதியில் அனுமதிக்கவேண்டுமென்றும், யாதொரு குறிப்பிட்ட சாதியினர் அல்லது வகுப்பினர்க்காகத் தனியிடம் ஒதுக்கிவைக்கக்கூடாது என்றும் 15-10-1932இல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன (இராசதுரை 1992 : 56). அத்துடன் சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்தவர்களின் வீட்டுத் திருமணங்களில் எல்லாச் சாதியாரும் ஒன்றாக அமர்ந்து உணவருந்தும் சமபந்தி முறையை இவ்வியக்கம் அறிமுகப்படுத்தியது. மேலும் சுயமரியாதை இயக்க மாநாடுகளில், அன்று தீண்டத்தகாத சாதியாகக் கருதப்பட்ட நாடார் சமூகத்தைச் சார்ந்த சமையல்காரர்களே சமையல் செய்தனர். இதனை வெளிப்படையாகவே மாநாட்டின் துண்டறிக்கைகளில் குறிப்பிட்டனர் (மேலது).

### பொதுவுடைமை இயக்கமும் சமபந்தியும்

கிராமப்புறங்களில் பண்ணை அடிமைகளாகவும் கொத்தடிமைகளாகவும் விவசாயக் கூலிகளாகவும் வாழ்ந்துவந்த ஒடுக்கப்பட்ட பல்வேறு சாதியினரை ஒன்றுதிரட்டி நிலவுடைமைக்கு எதிராகச் செயல்பட்டவர்கள் பொதுவுடைமைக் கட்சியினர்.

இவ்வியக்கத்தைத் தொடக்க காலத்தில் முன்நடத்திச் சென்றவர்கள் ஆதிக்கச் சாதிப் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அச்சாதியத் தளைகளிலிருந்து விடுபட்டவர்களாக விளங்கினர். கன்னடத்துப் பிராமணரான பி. சீனிவாசராவ் தன்னுடைய சாதிய மேலாண்மையைத் துறந்ததன் வெளிப்பாடாக அனைவரது வீடுகளிலும் உணவருந்தினார்.

இது பண்ணை அடிமைகளிடம் பாதிப்பை ஏற்படுத்தியது 'சீனிவாசராவ் என்று ஒரு கன்னடத்து அய்யர், தஞ்சை மாவட்டத்திற்கு வந்திருக்கின்றார். அவர் தாழ்த்தப்பட்டோர் வீட்டில் சாப்பிடுவார். அதுவும் அவர்கள் வீட்டுப் பாத்திரத்திலேயே சாப்பிடுவார்' என்று பண்ணை அடிமைகள் தங்களுக்குள் பேசிக் கொண்டனர் (ராமகிருஷ்ணன் 1993 : 61).

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கோபாலகிருஷ்ணன் (1963 : 156) என்ற மானிடவியல் பேராசிரியர் தஞ்சை மாவட்டத்திலுள்ள கும்பம்பேட்டை என்ற கிராமத்தைக் குறிப்பிடும்போது,

> பொதுவுடைமைக் கட்சியினர் ஆதி திராவிடர்களிடையே யும் மற்ற கீழ்ச்சாதிக்காரர்களிடையேயும் சாதிக் கோட் பாட்டையே தகர்த்துவிட்டனர் என்னலாம். இவர்கள் ஆதிதிராவிடர்களிடம் உண்ணுவதும் உறங்குவதும் உண்டு

என்று எழுதியுள்ளார். சமபந்தியை ஒரு சடங்குபோல் நிகழ்த் தாமல் தங்கள் அன்றாட வாழ்க்கையில் ஒரு பகுதியாகப் பொதுவுடைமை இயக்கத்தினர் ஆக்கிக்கொண்டதை மேற் கூறிய செய்திகள் உணர்த்துகின்றன.

கூலி உயர்வுப் போராட்டத்துடன் பண்பாட்டு மேலாண் மையைத் தகர்க்கும் பண்பாட்டடையாளப் போராட்டத்தை யும் இவ்வியக்கத்தினர் நடத்தியுள்ளனர்.

**எம்ஜிஆரின் 'சமபந்தி போஜனம்'**

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மீனாட்சிபுரம் என்ற கிராமத்தில் தேவேந்திர குல வேளாளர் குடும்பங்கள் இசுலா மிய சமயத்தை 1981 பிப்ரவரியில் தழுவின. இத்தகைய மத மாற்றம் ஏனைய பகுதிகளில் நிகழ்வதைத் தடுக்கும் வழிமுறை யாக 'சமபந்தி போஜனம்' என்ற சடங்கை அப்போதைய தமிழக முதல்வர் எம்.ஜி. ராமச்சந்திரன் அறிமுகப்படுத்தினார். அனைத்து இந்துக்களும் சமமானவர்கள் என்ற உணர்வினை ஊட்டும் வகையில் அட்டவணை சாதியினரும் ஏனைய சாதி யினரும் சமமாக அமர்ந்து உண்பதே சமபந்தி போஜனத்தின் நோக்கமாகும். இந்து அறநிலையத் துறையின் செலவில் அதன் கட்டுப்பாட்டிலுள்ள முக்கியக் கோவில்களில் சமபந்தி போஜ னம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆதிக்கச் சாதியினருடன் சேர்ந்து உணவருந்தியதன் மூலம் தாங்கள் சமத்துவம் அடைந்துவிட்டோம் என்று அட்டவணை சாதியினரை நம்ப வைக்கும் முயற்சியின் வெளிப்பாடாகவே சமபந்தி போஜனம் அமைந்தது.

இவ்வுண்மையைப் புரிந்துகொண்ட அட்டவணை சாதிச் சங்கங்கள் இதைப் புறக்கணித்தன. தென்காசி காசிவிசுவ நாதர் ஆலயத்தில் நிகழ்ந்த சமபந்தி போஜனச் சடங்கில், தென்காசித் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேவேந்திர குல வேளாளர் சமூகத்தைச் சேர்ந்தவருமான அருணாசலம் கலந்துகொள்ளவில்லை. அட்டவணை சாதி யினரை நிறைவுபடுத்த அரசு நிகழ்த்தும் திட்டமென்று கருதி ஏனைய சாதியினரும் இதில் ஆர்வத்துடன் கலந்துகொள்ள வில்லை. சென்னை நகரிலுள்ள சில தலித் அமைப்புகள் இதைப் புறக்கணித்ததுடன் இதற்கெதிராகத் துண்டுப் பிரசுரங்களை யும் வெளியிட்டன (Humtaz Ali Khan 1983: 51-52).

### மடைப்பள்ளியில் தொடங்கவேண்டிய சமபந்தி

எம்ஜிஆர் தொடங்கிவைத்த 'சமபந்தி போஜனம்' ஆண்டு தோறும் ஆகஸ்ட் 15இல் அரசு விழாவாக, கோவில் பிரகாரங் களில் நிகழ்கிறது. ஆனால் சமபந்தி போஜனம் தொடங்கப் பொருத்தமான இடம், கோயில் மடைப்பள்ளிதான்; கோவில் பிரகாரம் அல்ல.

தலித்துகளும் ஏனைய பிற்படுத்தப்பட்ட சாதியினரும் கோவில் மடைப்பள்ளியில் நுழைந்து உணவு சமைத்து அதைப் பரிமாறும்பொழுதுதான் சமபந்தி போஜனம் என்ற சொல் பொருளுடையதாய் இருக்கும். அது நிகழாதவரை இது வெறும் போலிச் சடங்கேயாகும்.

இச்சடங்கைக்கூடச் சில இந்து மதத் தலைவர்கள் விரும்ப வில்லை. அஹோபில மடத்தின் நாற்பத்தைந்தாவது பட்ட மான ஸ்ரீமத் அழகியசிங்கர்,

> கோயில்களில் சமபந்தி போஜனம் நடத்தப்படுவது சரி யல்ல. இதனால் கோயில் களங்கப்படுத்தப்படுகிறது

என்று சாடியுள்ளார் (தினமணி, மதுரை 24-5-98)

### எதிர்ப்பண்பாடு

இந்தியப் பண்பாட்டில் சாதியும் தீண்டாமையும் வலுவாக இடம்பெற்றுள்ளன. உணவு சமைப்பதிலும் பரிமாறுவதிலும் உண்பதிலும் சாதியம் வலுவாகக் கால் ஊன்றி உள்ளது. பிரா மணர் சாப்பிட்ட எச்சில் இலையில் மீந்துள்ளதை நாயோ, பிச்சைக்காரனோ உண்டால்கூடத் தீட்டு ஏற்படும் என்று அஞ்சி வேதப் பள்ளிகளிலும் ஆச்சாரியார்கள் எழுந்தருளும் போது நிகழும் விருந்துகளிலும் எச்சில் இலையைக் குழி வெட் டிப் புதைக்கும் பழக்கம் இன்றும் நிலவுகிறது. இச்செயலுக்குச் சுற்றுப்புறத் தூய்மையுணர்வு காரணம் அல்ல. சாதிய மேலாண்மையே காரணமாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாண்டியா மாவட்டத்திலுள்ள தளகரவதி என்ற கிராமத்தில் ஒக்கிலிக வகுப்பைச் சார்ந்த ஒன்பது இளைஞர்கள் தலித் நண்பர்களின் வீடுகளில் பண்டிகை விருந்து உண்டமைக்காக அவர்களுடைய தலையை மொட்டையடித்துக் கோமியத்தைக் குடிக்க வைத்தனர். இந்நிகழ்ச்சி 1985ஆம் ஆண்டில் நிகழ்ந்துள்ளது (பகவான் 1997 : 183-184). இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்திலேயே இத்தகைய நிலையென்றால் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் எத்தகைய நிலை நம் சமூகத்தில் நிலவி இருக்குமென்பதைக் கற்பனை செய்து பார்த்துக்கொள்ளலாம்.

இத்தகைய கொடுமையான சமூகச் சூழலில் இசுலாம், சீக்கியம் போன்ற சமயங்களும் நாராயண குரு, இராமலிங்கர், வைகுண்டசாமி போன்ற சமய-சமூகச் சீர்திருத்தவாதிகளும் சமபந்தியைக் கடைப்பிடிக்கும்படி வலியுறுத்திய செயல் சாதாரணச் செயலல்ல.[7]

சமூக வாழ்வில் ஆதிக்கம் செலுத்தும் முகாமையான குழுவினது (Dominant Group) பண்பாட்டு மேலாண்மைக்கு எதிராக மக்கள் உருவாக்கும் பண்பாட்டை எதிர்ப்பண்பாடு (Counter Culture) என்று மானிடவியலார் குறிப்பிடுவர்.

ஆதிக்கச் சக்திகள் உருவாக்கிப் பேணும் ஒழுக்கவிதிகள் மற்றும் மரபுகளைக் கேலிக்குள்ளாக்குவது, அவற்றுக்கெதிராகக் கலகக் குரல் எழுப்புவது, அவற்றை மீறுவது, புதிய பண்பாட்டு அடையாளங்களை உருவாக்குவது ஆகியன எதிர்ப்பண்பாட்டின் முக்கியக் கூறுகளாகும்.

இந்த வகையில் உணவு தொடர்பான மேட்டிமையோரின் மரபு வழிவந்த கட்டுப்பாடுகளையும் விலக்குகளையும் (taboo) மீறும் சமபந்தி என்பது எதிர்ப்பண்பாடாக உருவான ஒன்றுதான்.

ஆனால், இன்று நம் அரசியல்வாதிகள் எதிர்ப்பண்பாடாக உருவான சமபந்தியைக் கேலிக்குரிய போலிச் சடங்காக—அரசு விழாவாக மாற்றிவிட்டார்கள். இசுலாமியர்களின் 'இப்தார்' விருந்தும்கூட இவர்களிடமிருந்து தப்பவில்லை.

ஆண்டுக்கொரு முறை சமபந்தி போஜனம் ஒருபுறம் நிகழ, ஆண்டு முழுவதும் தமிழ்நாட்டின் பல கிராமப் பகுதிகளில் இன்றும் இரட்டைக் குவளை முறை வழக்கிலுள்ளது.[8] இருக்கையில் அமர்ந்து உணவு விடுதிகளில் உணவு உண்ணும் உரிமை மறுக்கப்பட்டுத் தரையில் அமர்ந்து தலித்துகள் உணவருந்தும் அவலம் இன்றும் நிலவுகிறது. புண்ணுக்குப் புனுகு பூசுவதுபோல இவற்றையெல்லாம் வசதியாக மறந்துவிட்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அல்லது மறைத்துவிட்டு சமபந்தி போஜன விழா நடத்தி, கிழவிகளோடு அரசியல் தலைவர்கள் அமர்ந்துண்ணும் புகைப் படங்களை வெளியிடச்செய்து மகிழ்கின்றனர்.

எதிர்ப்பண்பாடான சமபந்தியானது அதன் கலகத் தன்மையை இழந்து, வாக்குச் சீட்டுகளைப் பெற மேற் கொள்ளும் செப்படி வித்தைகளில் ஒன்றாக இன்று குறுகிவிட்டது.

## குறிப்புகள்

1 நைவேத்ய உணவைத் துணியால் மூடிச்சென்று திரை மறைவில் படைப்பதைப் பயன்படுத்தி இறைவனுக்கு உணவு படைக்காது ஏமாற்றி வந்த நிகழ்ச்சி குறித்து வாய்மொழிக் கதை ஒன்று வழக்கிலுள்ளது. திருவாங் கூர் என்ற ஊரிலுள்ள சிவன் கோவில் பூசகர், நைவேத் தியத்திற்கான உணவுப் பொருள்களை மொத்தமாகத் தன் வீட்டிற்கு எடுத்துச்சென்றுவிட்டார். நாள் தோறும் கோவில் மடைப்பள்ளி அடுப்பில் ஒன்றி ரண்டு செங்கல் துண்டுகளைச் சூடுபடுத்தித் தாம் பாளத்தில் வைத்து ஈரத் துணியால் மூடி கருவறைக்கு எடுத்துச் செல்வார். சூடான செங்கல் மீது ஈரத்துணி படுவதால் ஆவி பறக்கும். சூடான நைவேத்யம் தாம்பாளத்தில் உள்ளது என்ற உணர்வைப் பார்ப் பவர்களுக்கு இது தோற்றுவிக்கும்.

பூசை முடிந்ததும், நைவேத்ய உணவைக் கோவில் திண்ணையில் இளைப்பாறும் வழிப்போக்கர்களுக்கு வழங்குவது பண்டைக்கால நடைமுறை. இரட்டைப் புலவர்கள் (ஒருவர் பார்வை இழந்தவர், ஒருவர் முடவர்) திருவாங்கூர் சிவன் கோவிலுக்குப் பசியுடன் வந்து நைவேத்யத்தை எதிர்பார்த்திருந்தனர். பூசை நிகழ்வதன் அறிகுறியாக வாத்தியங்களின் ஓசை கேட்டது. ஆனால் பிரசாதம் வந்தபாடில்லை. பசி பொறுக்க முடியாத பார்வையற்ற கவிஞர், "தேங்கு புக ழாங்கூர்ச் சிவனே யல்லாளியப்பா நாங்கள் பசித் திருக்கை ஞாயமோ" என்று பாடினார் ('புகழ் நிறைந்த திருவாங்கூரில் எழுந்தருளியுள்ள சிவ பெருமானே! இரவிலும் எங்களைக் காக்கின்ற அப்பனே! நாங்கள் உணவின்றிப் பசித்திருப்பது நியாயமா?' என்பது இவ்வரிகளின் பொருளாகும்). பூசகரின் செயலை எவ்வாறோ அறிந்துகொண்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முடமான கவிஞர் இதற்கு விடை தருவது போல் "......போங்காணும், கூறுவங்கு டோன் முரசு கொட்டோசையில்லாமல் சோறு கண்ட மூளியார் சொல்" என்று பாடினார் ('சங்கு—பறை—பேரிகை—கொட்டு ஆகியனவற்றின் ஒலி முழக்கம் கேட்பதல்லாமல் பிரசாதமான சோற்றைப் பார்த்தவறியவர்கள் யாருமில்லை. ஆதலால் போய் வாரும்' என்பது இதன் பொருளாகும்).

2 இராமானுஜரால் வைணவர்களாக்கப்பட்ட 'சாத்தாணியாதவர்' என்றழைக்கப்படும் 'தாதர்' சாதியினர் சில வைணவக் கோவில்களில் மடைப்பள்ளி உதவியாளர்களாக உள்ளனர்.

3 "வேள்வி முயலாத தாழ்ந்தவனிடம் உண்ணல் தகாது. வேறு பிழைப்பின்றேல், ஓரிரவு கழிப்பதற்குரிய தானியம் மட்டும் பெறுக."

4 தீட்டைப்போக்கும் கருவியாக இந்துப் பண்பாட்டில் பசு இடம் பெற்றுள்ளது. "சண்டாளரால் வீடு தீட்டுப்பட்டால், விளக்கி, மெழுகி, கொஞ்சம் மேல் மண்ணை வெளியேற்றி, பசுவை ஒரு நாள் கட்டி வைத்து இவ்வைந்தாலும் தூய்மைப்படுத்துக" என்று மனுதர்ம சாஸ்திரம் (5 : 12) கூறுகிறது. மாட்டுத் தொழுவில் ஏற்படும் தீங்கு அங்கு மாடு கட்டப்படுவதால் நீங்கி விடுகிறது. எனவேதான் நாடார் உபதேசியாருக்கு மாட்டுத் தொழுவில் உணவு பரிமாறப்பட்டது. கிறித்தவராக மதம் மாறினாலும் தீட்டுக் குறித்த இந்துமத மேலாதிக்கச் சிந்தனையிலிருந்து வெள்ளாள உபதேசியார் விடுபடவில்லை என்பதையே இந்நிகழ்ச்சி சுட்டுகிறது. காஞ்சி காமகோடி மடத்தின் பீடாதிபதியாக இருந்த சந்திரசேகர சரஸ்வதி சங்கராச்சாரியாரை 15-10-1927இல் காந்தி சந்தித்தார். இச்சந்திப்பு குறித்து "பாலக்காட்டைச் சேர்ந்த நல்லிசேரியில் சுவாமிகள் தங்கியிருந்த ஜாகையின் பின்புறம் அமைந்திருக்கும் மாட்டுக்கொட்டகையில் காந்திக்கும் சுவாமிகளுக்கும் சந்திப்பு ஏற்பட்டது" என்று இராமசாமி (1969 : 575) எழுதியுள்ளார். பனியா (வைசியர்) சாதிப் பிரிவைச் சார்ந்த காந்தியின் வருகையால் ஏற்படும் தீட்டைப் போக்கவே சந்திப்பு நிகழுமிடமாக மாட்டுத் தொழுவம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



5 வ.வே.சு. அய்யரின் மகள் சுபத்திரையும் மகன் கிருஷ்ணமூர்த்தியும் பிராமணர் அல்லாத மாணவர்களிடையே அமர்ந்துதான் உணவு உண்டனர். அய்யரும் சாதி வேறுபாடின்றி மற்றவருடன் அமர்ந்து உணவருந்தும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். தனியாக அமர்ந்து உணவருந்திய இரு பிராமண மாணவர்களின் பெற்றோர் சமபந்தியை விரும்பவில்லை என்று அய்யர் குறிப்பிட்டுள்ளார். மேலும், ஆசிரமம் இருந்த பகுதி சனாதனிகள் நிறைந்துள்ள பகுதியாதலால் பிரச்சனையை உருவாக்க அவர் விரும்பவில்லை (சண்முகசாமி 1986).

6 சில இடங்களில் மூங்கிலை இரண்டாகப் பிளந்து வாழை மட்டையைப் போன்று பயன்படுத்தினர்.

7 கிறித்தவர் தேவாலயங்களில் இடம்பெறும் நற்கருணை வழங்கும் சடங்கு ஓர் எதிர்ப்பண்பாடாக உருவாகும் வாய்ப்பு கிறித்தவம் பரவிய தொடக்க காலத்திலிருந்தது. ஆனால், இந்தியாவிலிருந்த கிறித்தவத் தலைமை, சாதியத்தோடு செய்துகொண்ட சமரசத்தின் விளைவாக இதைத் தவறவிட்டுவிட, வெறும் சமயச்சடங்காக மட்டுமே இது காட்சியளித்தது.

8 இரட்டைக் குவளை முறைக்கு மாற்றாக, 'பயன்படுத்தியதும் தூக்கியெறியும்' பிளாஸ்டிக் குவளை இன்று சில கிராமங்களில் பயன்படுத்தப்படுகிறது. இதற்காகக் கூடுதலாக 25 காசு தேநீர் அல்லது காப்பிக்குக் கொடுக்கவேண்டியிருக்கிறது.

## துணை நூற்பட்டியல்

அரோணிமூஸ் 1989, ஸ்ரீநாராயண குரு (சிறு வாழ்க்கை சரித்திரம், கார்டியன் பிரஸ், சென்னை.

அலாய்சியஸ், ஞான. 1999, அயோத்திதாசர் சிந்தனைகள்-I அரசியல், சமூகம், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை.

இராமசாமி, அ. 1969, தமிழ்நாட்டில் காந்தி, காந்தி நூல் வெளியீட்டுக் கழகம், சென்னை.

இராசதுரை, பு. 1992, சுயமரியாதை இயக்கத்திற்கு நாடார்கள் ஆற்றிய தொண்டு, இளமாறன் பதிப்பகம், விருதுநகர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கணபதி, ரா. (தொகுப்பாசிரியர்) 1986, தெய்வத்தின் குரல் (மூன்றாம் தொகுதி), வானதி பதிப்பகம், சென்னை.

கைலாசம்பிள்ளை, த. 1954, ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு (முதற்பாகம்).

கோபாலகிருஷ்ணன் 1963, மானிடவியல், தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை.

சிதம்பரனார், சாமி. 1997, தமிழர் தலைவர் பெரியார் ஈ.வெ.ரா. வாழ்க்கை வரலாறு, சுயமரியாதை பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை.

சுந்தரவடிவேலு, நெ. து. 1979, புரட்சியாளர் பெரியார்.

சுப்பிரமணியன், பா. 1989, தஞ்சை மராட்டிய மன்னர் மோடி ஆவணத் தமிழாக்கமும் குறிப்புரையும் (முதல் தொகுதி), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

சுபாஷ் சந்திர போஸ், ச. 1999, சாம்பவான் ஓடைச் சிவராமன், பாக்கியம் பதிப்பகம், தஞ்சாவூர் மாவட்டம்.

தங்கராசனார் 1958, கிறிஸ்தவக் கம்பன், நாசரேத்.

திருலோக சீதாராம் 1961, மனுதர்ம சாஸ்திரம், ஜோதி நிலையம், சென்னை.

தோதாத்ரி 1982, 'தமிழில் துப்பறியும் கதைகள்—ஓர் ஆய்வு', நா.வா.வின் ஆராய்ச்சி (மலர்), நெல்லை ஆய்வுக் குழு, தூத்துக்குடி.

பகவான் 1997, ஆதிசங்கரரின் மக்கள் விரோதக் கருத்துகள், அலைகள் வெளியீட்டகம், சென்னை.

ராமகிருஷ்ணன், என். 1993, பண்ணை அடிமைத்தனத்திற்கு எதிரான போராட்டத்தில் பி. எஸ். தனுஷ்கோடி, சவுத் ஏசியன் புக்ஸ், சென்னை.

வள்ளலார் 1994, சீவகாருணிய ஒழுக்கம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

வேங்கடராமையா 1984, தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

வேங்கடராஜுலு, ரா. (மொழிபெயர்ப்பாசிரியர்) 1998, மகாத்மா காந்தியின் சுயசரிதை (சத்திய சோதனை), நவஜீவன் பிரசுராலயம், அகமதாபாத்.

வேங்கடராஜுலு, ரா. (மொ-ர்) 1961, மகாத்மா காந்தி நூல்கள் ஏழாம் தொகுப்பு, காந்தி நூல் வெளியீட்டுக் கழகம், சென்னை.

www.tamilarangam.net



Appasamy Paul 1923, *The Centenary History of the C.M.S. in Tinnevelly*, Palayamkottai.

Caldwell 1881, *Records of the Early History of the Tinnevelly Mission*, Chennai.

Ferrole 1951, *The Jesuits in Malabar, Vol. II*, Bangalore.

Hadit Sing 1998, Langar—Sikh's Ideal concept, *Abstracts of Sikh Studies* Vol. 1, Issue 2 April-June 1998.

Harbaus Singh/Lal Mani Joshi 1973, *An Introduction to Indian Religions*, Guru Govind Singh Department of Religious Studies, Punjab University, Patiala.

Hanumanthan, K. R. 1979, *Untouchability: A Historical Study Upto 1500 A.D.*, Koodal Publishers, Madurai.

Humtaz Ali Khan 1983, *Mass Conversions of Meenakshipuram: A Sociological Enquiry*, The Christian Literature Society, Chennai.

Pauline Kolonda 1991, 'Purity and Pollution', *Religion in India*, Ed. T. N. Madan, Oxford University Press, New Delhi.

Romila Thapar 1978, 'Daksina as forms of Exchange', *Ancient Indian Social History*, Orient Longman, Delhi.

Shanmugaswamy R. 1986, 'V. V. S. Aiyar and The Shermadevi Gurukulam—A Critical Evaluation', *V. V. S. Aiyar Crittical Studies*, Subramaniam C. (Ed), Institute of South Indian Studies, Chennai.

Sharrock, J. A. 1910, South Indian Mission, London.

[கட்டுரையின் கையெழுத்துப் பிரதியைப் படியெடுத்துதவிய செல்வி கி. சுந்தரச்செல்விக்கும் கணினியில் படியெடுத்துதவிய திருமதி டெய்சிக்கும், செல்வன் ஆறுமுகத்திற்கும் என் நன்றி]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விலை ரூபாய் ஐந்து மட்டும்

எம்ஜிஆர் தொடங்கிவைத்த 'சமபந்தி போஜனம்' ஆண்டு தோறும் ஆகஸ்டு 15இல் அரசு விழாவாக, கோவில் பிரகாரங்களில் நிகழ்கிறது. ஆனால், சமபந்தி போஜனம் தொடங்கப் பொருத்தமான இடம் கோவில் மடைப்பள்ளிதான். கோவில் பிரகாரம் அல்ல.

தலித்துகளும் ஏனைய பிற்படுத்தப்பட்ட சாதியினரும் கோவில் மடைப்பள்ளியில் நுழைந்து உணவு சமைத்து அதைப் பரிமாறும்பொழுதுதான் சமபந்தி போஜனம் என்ற சொல் பொருளுடையதாய் இருக்கும்.

ஆனால் இன்று நம் அரசியல்வாதிகள் எதிர்ப்பண்பாடாக உருவான சமபந்தியைக் கேலிக்குரிய போலிச் சடங்காக - அரசு விழாவாக மாற்றி விட்டார்கள். இசுலாமியர்களின் 'இப்தார்' விருந்தும்கூட இவர்களிடமிருந்து தப்பவில்லை.

அச்சிட்டோர்
**மக்கள் அச்சகம்**
24 உனிசு அலி சாகிப் தெரு
எல்லிசு சாலை சென்னை 600 002

வெளியிட்டோர்
பி. கணபதி சுப்பிரமணியன்
இளைஞர் வெளியீடு
15 பி, பிரையண்ட் நகர்
2வது தெரு,
தூத்துக்குடி - 628 008.